# சுபீட்சம்

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 12.09.2023 | supeedsam.com | supeedsam@gmail.com





சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com


# பணத்துக்காக புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவரே பிள்ளையான்

'பணத்துக்காக புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த பிள்ளையான், தற்போது இந்த பக்கம் இருப்பதால் அவரின் நடத்தை மாறுமா என்ன....' என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான ஹிருணிகா பிரேமசந்திர.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்களை பிள்ளையானின் வலது கையாக இருந்தவரே வெளிப்படுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# கே.பி,கருணா, பிள்ளையான் உள்ளிட்டவர்களை எந்த அடிப்படையில் விடுவித்தீர்கள்?



குமரன் பத்மநாதன், கருணா, பிள்ளையான் மற்றும் ராம் மற்றும் நகுலன் என அழைக்கப்படும் இரண்டு கொலையாளிகளை எவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவிடம் சம்பிக்க ரணவக்க விளக்கம் கோரியுள்ளார்.

கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் இராணுவப் பாதுகாப்பில் வசிக்கிற அதேசமயம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் கிராமப்புற வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக விக்கிரமசிங்க-ராஜபக்ஷ அரசாங்கத்தில் பணியாற்றுகிறார்.

2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த சம்பிக்க ரணவக்க, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட பொது

02 ஆம் பக்கத்தில்...

# சனல் 4 ஆவணப்படம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்காது

பிரித்தானியாவின் செனல் 4 தொலைக்காட்சி ஒளிப்பரப்பிய சந்தேகங்களுடன் கூடிய ஆவணப்படம் ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் அல்லது அவர்களின் உறவினர்களுக்கு எவ்வித நீதியையும் பெற்றுக்கொடுக்காது இந்தியன் டிபென்ஸ் ரிவிவ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

Debunking Channel 4 (How RAW and SIS) work together to prevent Easter attack in Sri Lanka என்ற தலைப்பில்

02 ஆம் பக்கத்தில்...

# நீண்டகாலமாக பிள்ளையான் உள்ளிட்ட பலருக்கு 35 இலட்சம் ரூபா நிதி வழங்கும் பாதுகாப்பு அமைச்சு

பிள்ளையான் எனப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட பலருக்கு பாதுகாப்பு அமைச்சினால் 35 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து விசாரணை அவசியம் என கோருபவர்களும், அதற்கு



02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கை மீட்போம் என கிழக்கை அழிக்கின்றவர்களை மண்ணை விட்டு அகற்ற வேண்டியது மட்டு மண்ணில் பிறந்த ஒவ்வொருவரின் கடமை

## சீயோன் தேவாலய குண்டுவெடிப்பில் 3 பேரை இழந்த பாதிக்கப்பட்ட அரசரட்ணம் வேள் வேண்டுகொள்



(கனகராசா சரவணன்)

கிழக்கை மீட்கவந்தோம் என கூறிக் கொண்டு கிழக்கை இன்னொரு சமூகத்துக்காக தனிப்பட்ட ஒருவரின் நன்மைக்காக துரோகங்களை இழைத்து சமூகத்தை அழிக்கின்ற இவர்களை இந்த மண்ணையும் மக்களையும் விட்டு அகற்ற வேண்டியது மட்டக்களப்பில் மண்ணில்

02 ஆம் பக்கத்தில்...

# கோக்குத்தோடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி ஒளிவு மறைவு இல்லாமல் முன்னெடுக்கப்பட வேண்டும்

மனிதபுதைகுழி அகழ்வுப்பணி ஆரம்பிக்கப்பட்டவுடன் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆய்வுப்பணிகள் அமைய வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை இன்றையதினம் நேரில் சென்று

02 ஆம் பக்கத்தில்...

# மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உண்டு



கடந்தகால மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நடா அல் நஷிப் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அத்தோடு இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாப்பதில் பொறுப்புக்கூறல் அவசியம் என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 25605: cicero





MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!


- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# தமிழகத்தில் ஒரு லட்சம் இலக்கிய விருது பெறும் மாத்தளை பெ.வடிவேலன்




மாத்தளை வடிவேலனின் வல்லமை தாராயோ என்ற சிறுகதை தொகுதி தமிழ் நாட்டில் மிகப்பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மலையக மக்களின் வாழ்கையின் அவலங்களை மிக யாதார்த்தமாக சித்தரிக்கும் இலக்கிய தொகுப்பாக இந்த சிறுகதை தொகுதி தமிழ் அறிஞர்கள் மத்தியில் பெரும் பாராட்டை பெற்றுள்ளது. இந்த அங்கீகாரத்திற்கு அடையாளமாக தாய் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர் முனைவர் டாக்டர் குமார் ராஜேந்திரன் விமீட இலக்கிய விருதாக மாத்தளை வடிவேலனின் வல்லமை தாராயோ என்ற சிறுகதை தொகுப்பிற்கு இலங்கை நாணயத்தில் ஒரு இலட்சம் ரூபாய் விருது வழங்கி கௌரவிக்க உள்ளார்.


பெ.வடிவேலன்

தமிழகத்தின் மிகச் சிறந்த நடுவர்கள் குழு மலையக மக்களின் வாழ்க்கையை தமிழக மக்களுக்கு எடுத்துச் சொல்லும் சிறந்த சிறுகதை நூலாக இலங்கையில் வெளிவந்த வல்லமை தாராயோ என்ற தொகுதி இடம்பெறுகின்றது என்று புகழ் ப10த்த ஊடகவியலாளரும் துக்ளக் குமுதம் ஜெயா விஜய் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணியாற்றியவரும் தற்போது தாய் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியருமான மணா தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து பேராசான் மு.நித்தியானந்தன் இந்த தொகுதிக்கு வழங்கிய முன்னுரை மாத்தளை வடிவேலனின் எழுத்தாற்றலை தமிழக வாசகர்களுக்கு கொண்டு செல்வதில் பெரும் வெற்றி பெற்றுள்ளது. பதிப்பாளரும் எழுத்தாளருமான எச்.எச்.விக்கிரமசிங்க (மாத்தளை செல்வா) அவர்களின் பெரும் முயற்சியில் தொகுக்கப்பட்டு கலை ஒளி முத்தையா பிள்ளை ஞாபகார்த்தக்குழு வெளியிட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைகழக தமிழ் கற்கைகள் துறை மாதாந்த இலக்கிய நிகழ்வில் பேராசிரியர் சி.சந்திரசேகரன் தலைமையில் அறிமுகம் செய்தது மாத்தளை வடிவேலனுக்கு மற்றுமொரு கௌரவம் ஆகும்.

சாரல் நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' டாக்டர் குமார் ராஜேந்திரன் அனுசரணை வழங்கிய சி.வி. வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்' மு. நித்தியானந்தனின் 'மலையக சுடர்மணிகள்' 'மலையக இலக்கியம் சிறுமை கண்டு பொங்குதல்'. மாத்தளை வடிவேலனின் 'வல்லமை தாரயோ' ஆகிய நூல்கள் வரிசையில் இலங்கையில் புகழ் பூத்த எழுத்தாளர் சலிய குணவர்த்தன சிங்கள மொழியில் மொழி பெயர்த்த 14 சிறுகதைகளை மத்தளை மலரன்பன் தமிழில் மொழி பெயர்த்த அமைச்சர்களின் முகம் என்ற பிறமொழி சிறுகதைகளும் தெளிவத்தை ஜோசப் கதைகள் 59 கதைகள் 55% பக்கங்களில் விரைவில் வெளிவர இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.


டாக்டர் குமார் ராஜேந்திரன்

டாக்டர்எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் டிசம்பர் மாதம் நடைபெற இருக்கும் 'மலையகம் 200' முழு நாள் ஆய்வரங்கில் மாத்தளை வடிவேலனின் ஒரு இலட்ச ரூபாய் இலக்கிய விருதினை தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகே; பொய்யாமொழி வழங்க உள்ளார்.

# கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளராக வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மன்சூர் கடமையேற்பு!



(அபு அலா)

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளராக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர் தனது கடமைகளை (11) பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டானினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கமைவாக, பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயகா இன்று வழங்கி வைத்த கடிதத்தின் பிரகாரம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துவண்டா, முதலமைச்சின் செயலாளர் என்.மதிவண்ணன், பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) எம்.எம்.நஸீர், ஆளணி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளர் (திருமதி) ஆர்.யூ.ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சனல் 4 ஆவணப்படம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை ...

அந்த இணையத்தளம் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

செனல் 4 ஆவணப்படம் இலங்கைக்குள் இஸ்லாமிய அடிப்படை கொள்கை இருப்பதை நிராகரிக்கும் மோசமான முயற்சி எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்தின் ஊடாக இந்திய துணை கண்டத்தில் இஸ்லாமிய ஜிகாத் அமைப்புகளை கண்டுபிடிக்க கஷ்டப்பட்ட இந்திய மற்றும் இலங்கை புலனாய்வுப் பிரிவுகளுக்கு அவகௌரவம் நடந்துள்ளது.

ராஜபக்ச குடும்பம் மற்றும் அவர்களின் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்த சந்தர்ப்பத்தில் ஊழல் நிறைந்த உறவினர் உபசரிப்பை விமர்சித்தது உண்மையாக இருக்கலாம்.

ராஜபக்சவினர் ஈஸ்டர் தாக்குதலின் ஒரு அங்கம் என காட்டும் செனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படமானது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் இருப்பை நிராகரிக்கும் மோசமான முயற்சி எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

## கிழக்கை மீட்போம் என கிழக்கை அழிக்கின்றவர்களை மண்ணை ...

பிறந்த ஒவ்வொருவருடைய கடமையாகும் எனவே இவர்களை சர்வதேசத்தின் முன் நிறுத்தி எங்களுக்கு நீதியை பெற்றுத்தருமாறு மட்டு சீயோன் தேவாலய குண்டுவெடிப்பில் 3 பேரை இழந்த அரசரட்ணம் வேள் வேண்டுகொள் விடுத்துள்ளார்.

சீயோன் தேவாலய குண்டுவெடிப்பில் 3 பேரை இழந்தவர்களுக்கு தேவாலயத்தில் முன்னால் திங்கட்கிழமை (11) அரசரட்ணம் வேள்; அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

நான் அரசரட்ணம் வேள் மட்டக்களப்பில் சீயோன் தேவாலயத்தில் ஈஸ்ரர் குண்டு தாக்குதலில் எனது ஒரே ஒரு மகன் மற்றும் மூத்த சகோதரி அவரது கணவன் 3 பேரை இழந்ததுடன் சகோதரிகள் இருவர் படுகாயமடைந்ததுடன் உயிரிழந்த சகோதரியின் சிறுமியான மகள் இரு கண்களும் பார்வையின்றி பாதிக்கப்பட்டு; இருந்து வருகின்றனர்.

தற்போது நாட்டில் பேசும் பொருளாடக மாறியிருக்கின்ற ஈஸ்ரர் குண்டுதாக்குதலுக்கு முதலில் கடும் கண்டனம் தெரிவிக்கின்றேன். காரணம் நூறுவீதம் இந்த குண்டுதாக்குதலில் பாதிக்கப்பட்டவன் என்றவகையில்

எங்களுடைய அப்பாவி மக்களது உயிர்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்வதை அரசியல் தலைவர்களும் ஏனையவர்களும் இதனை நிறுத்திக் கொள்ள வேண்டும் பாதிக்கப்பட்ட நாங்கள் மிகவும் வேதனையுடன் இருக்கும் எங்களை தொடர்ந்து காயப்படுத்துகின்ற செயலாகவே அமைகின்றது .

நான் இலங்கை நாட்டையும் நாட்டு சட்டத்தையும் பூரணமாக நம்புகின்றேன் ஆனால் இலங்கை சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களாகிய எங்களுக்கு நிரந்தர தீர்வும் இழப்பீடும் கிடைக்காது காரணம் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பதை நான் ஒரு வீதமும் நம்பவில்லை ஏன் என்றால் நாட்டின் சட்டத்தின் மூலம் நீதி கிடைக்காது.

எனவே இந்த குண்டு வெடிப்புக்கு காரணமாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் அதன் செயலாளர் மற்றும் தற்போது கிழக்கை மீட்பதாக கூறி கிழக்கை அழிவுப் பாதைக்குள் கொண்டு செல்லுகின்ற அரசியல் தலைவர் அனைவரும் சர்வதேசத்தின் முன் நிறுத்தப்பட்டு சர்வதேச நீதி பொறிமுறை ஊடாக எங்களுக்கு நீதியை பெற்றுதரவேண்டும். அதேவேளை திரும்பவும் இப்படிப்பட்ட பாதிப்பு இந்த தேசத்தில் நடக்காதபடி இதை நடப்பித்தவர்கள் சட்டத்தின் முன் நிறத்தப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும் . நாட்டின் பாதுகாப்பு மீட்பு என கூறிக் கொண்டு நாட்டை அழிக்கின்றவர்கள் மத்தியில் இருந்து நாட்டை பாதுகாக்கவேண்டும் ஆகவே நாங்கள் மாத்திரமல்ல என்னுடைய குடும்பம் மாத்திரமல்ல நீங்களும் உங்கள் குடும்பமும் இப்படி ஒரு சூழ்நிலைக்குள்; உள்வாங்கப்படாது இருக்க வேண்டும் என்றால் இப்படிப்பட்ட துரோகிகளையும் ஈனப்பிறவிகளையும் இந்த மண்ணையும் மக்களையும் விட்டு அகற்ற வேண்டியது என்னுடைய கடமையல்ல மட்டக்களப்பில் மண்ணில் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். மக்கள் ஒன்றை கருத்தில் கொள்ளவும் என்னுடைய வாழ்க்கையில் நான் ஒரே ஒரு பிள்ளை அருமையான சகோதரி குடும்பம் 6 பேர் பாதிக்கப்பட்டு 3 பேரை இழந்து நிற்கின்றேன் எனவே நான் இதனால் தினமும் படும் வேதனையும் வலியும் உங்கள் குடும்பத்தில் நடக்காமல் இருக்க வேண்டும் என்றால் தாங்களை தங்களை தியாகிகளாக காட்டிக் கொண்டு இப்படிபட்டவர்களை இந்த மணில் இருந்து அடித்து துரத்தவேண்டும் இது உங்களுடைய கடமை

கிழக்கை மீட்கவந்தோம் என கூறிக் கொண்டு கிழக்கை இன்னொரு சமூகத்துக்காக தனிப்பட்ட ஒருவரின் நன்மைக்காக அவர்களுடைய அரசியலுக்காக இன்னும் இன்னும் துரோகங்களை இழைத்து சமூகத்தை அழிக்கின்ற ஈனபிறவிகளை துரோகிகளை இந்த மண்ணைவிட்டு அகற்றப்படவேண்டும் இது எனது பணிவான வேண்டுகோள் என கண்ணீர்மல்க தெரிவித்தார்.

## நீண்டகாலமாக பிள்ளையான் உள்ளிட்ட பலருக்கு 35 இலட்சம் ரூபா ...

பொறுப்புகூற வேண்டியவர்களும் தற்போதைய அரசாங்கத்திலேயே அங்கம் வகிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

செனல் 4 வெளிப்படுத்தலுக்கமைய, பிள்ளையானும், ஏப்ரல் 21 தாக்குதல் சூத்திரதாரிகளும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒரே சிறைச்சாலையில் இருந்துள்ளனர்.

பிள்ளையான் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் மூலம் ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து இன்னும் விசாரிக்கப்பட வேண்டிய பகுதிகள் உண்டு என்பது புலப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சினால் பிள்ளையான் உள்ளிட்ட பலருக்கு நீண்டகாலமாக 35 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தொகை எதற்காக வழங்கப்பட்டது என்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

எனவே, இந்த தாக்குதல்கள் குறித்து சுயாதீனமாக விசாரணையொன்று அவசியமாகின்றது.

அத்துடன், ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் இத்தகைய சதிகளை மேற்கொண்டு, இனவாதத்தை தூண்டிவிடுபவர்களுக்கு நிச்சயமாக தண்டனை வழங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

## கே.பி,கருணா, பிள்ளையான் உள்ளிட்டவர்களை எந்த ...

மன்னிப்பு குறித்து நாரஹேன்பிட்டி கட்சி அலுவலகத்தில் வார இறுதியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஒரு காலத்தில் பிள்ளையானின் நெருங்கிய கூட்டாளியாக இருந்த ஹன்சீர் ஆசாத் மௌலானாவின் வெளிப்பாட்டின் அடிப்படையில் சனல் 4 ஆவணப்படம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.மேலும் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களைப் புறக்கணிக்குமாறு கட்டளையிடும் வகையில் புலிகளுக்கு பணம் செலுத்தியமை தொடர்பிலும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்தோடு பாரிய குற்றச் செயல்களுக்கு காரணமானவர்களுக்கு எதிராக தமது கட்சியை உள்ளடக்கிய எதிர்கால அரசாங்கம் சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவை தளமாகக் கொண்ட UN-HRC மற்றும் பெயரிடப்படாத ஐரோப்பிய புலனாய்வு சேவைகள் பிள்ளையானின் உதவியாளர் மௌலானாவை அணுகியதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர்பாக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர ஆகியோர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ள சமர்ப்பிப்புகளை கருத்திற்கொண்டு மௌலானாவின் குற்றச்சாட்டுக்கள் ஆராயப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

மேலும் 2019 ஜனாதிபதித் தேர்தலில் தேசிய தௌஹீத் ஜமாத்தின் ஆதரவை அவர்கள் எவ்வாறு பெற்றனர் என்பதை விளக்க வேண்டும் என்றும் ராஜபக்சக்களிடம் சம்பிக்க ரணவக்க கேள்வியெழுப்பியுள்ளார்.

## மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய கடப்பாடு ...

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீனமான மற்றும் வெளிப்படையான விசாரணையை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நடா அல் நஷிப் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அது சர்வதேச உதவியுடனும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுமையான பங்களிப்புடனும் இடம்பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவாவில் உள்ள இலங்கை மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளில் சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்க அரசாங்கம் விசாரணைகள் மற்றும் வழக்குகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். உண்மையைத் தேடுவது மட்டும் போதாது என்றும் பொறுப்புக்கூறலுக்கான தெளிவான அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நடா அல் நஷிப் தெரிவித்துள்ளார்.

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி...

பார்வையிட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் கிட்டத்தட்ட 1% உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிகமான உடல்கள் புதைக்கப்பட்டு இருக்கும் என்ற சந்தேகங்களும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர் என்றும் மேலும் மேலதிக வேலைகளை செய்வதற்கு காலம் அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த மனித புதைகுழிகளை பதிவு செய்வதும் ஆவணப்படுத்தப்படுவதும் மிகவும் முக்கியமான விடையம். குற்ற வழக்குகளிலே இவைகள் தான் சாட்சியம் இந்த சாட்சியங்களை பெற்று நீதிமன்றத்தின் முன்னிலையில் வைக்கின்ற வரையில் ஆவணங்களில் ஒரு சிறிய தவறு ஏற்பட்டாலும் குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கு மிகப்பெரியளவில் உதவுகின்ற விடையம் ஆகும்.

ஆகவே, அனைத்து விடையங்களும் எந்த வித ஒளிவு மறைவு இல்லாமல் இந்த ஆவணப்படுத்தல் மிக முக்கியமானது என அனைவரும் எதிர்பார்க்கின்றோம். துரதிஸ்டவசமாக இன்று பார்த்தால் ஊடகங்களுக்கும் மனித புதைகுழி நடவடிக்கைகளின் போது அதை ஆவணப்படுத்துவதை தடை செய்யப்பட்டுள்ளது. வேலை தொடங்குவதற்கு முதலும் வேலை முடிகின்ற பொழுதும் அவர்கள் புகைப்படங்களை எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர சாட்சியங்கள் சேகரிக்கும் முறைகள் சரியாக நடைபெறுகின்றதா இல்லையா என்பதை உலக மக்கள் அறிய அவற்றை ஆவணப்படுத்த ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த மனித புதைகுழிகள் கண்டறிந்த காலகட்டத்திலே கணிசமான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலே ஊடகங்கள் செய்திகளை வெளிக்கொண்டு வந்தமையால் மேலோட்டமாக காட்டுகின்ற வகையில் எமக்கு தெரியக்கூடியதாக உள்ளது அதுவும் மட்டுப்படுத்தும் வகையில் காட்டப்படுகின்றமை பலத்த ஏமாற்றத்தை கொடுக்கின்றதாக காணப்படுகின்றது

மேலும், இந்த அகழ்வுப்பணி ஆரம்பிக்கப்பட்டவுடன் பாதிக்கப்பட்ட தரப்புகள் ஏற்றுக்கொள்ளதக்கதாக ஆய்வுப்பணிகள் இடம்பெற வேண்டும்.

ஒரு சர்வதேச விசாரணை மூலமாகத்தான் இந்த பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவரலாம் என்கின்ற சூழ்நிலையிலே இன்றைய தினம் இவற்றை பார்வையிடும் போது அதிகாரிகள் 17 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மேலும் உடல்கள் இருக்கலாம் என்று சந்தேகித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## பணத்துக்காக புலிகளின் போராட்டத்தைக்...

இது தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட நியாயமான காரணம் உள்ளது.

பிள்ளையான என்பவர் பிரபாகரனுடன் இருந்தவர், அந்த அமைப்புடன் இணைந்து செயற்பட்டுவிட்டு, தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அந்த அமைப்பை காட்டிக்கொடுத்தார் பிள்ளையான்.

பிரபாகரின் செயலை நாம் சரியென கூறவரவில்லை, தமக்கு தனி இராஜ்ஜியமாக இருக்க வேண்டும் என பிரபாகரன் நம்பினார். பிரபாகரனுடன் இணைந்து தனி நாட்டுக்காக போராடியவர்தான் பிள்ளையான். அவ்வாறு போராடிய நபர் பணத்துக்காக தனது தலைவரை காட்டிக் கொடுத்தார்.

பிள்ளையானின் இந்த செயல், எமக்கு (சிங்கள மக்களுக்கு) வீரச்செயலாக தெரியலாம். பணத்துக்காக உளவு தகவல்கள், உபாயங்களை அரசுக்கு வழங்கினார். ஒன்றாக இருந்த தனது தலைவரையே காட்டிக்கொடுத்த அந்த நபர் (பிள்ளையான்) எம்முடன் இணைந்ததால் அவரின் இந்த நடத்தை மாறுமா?

பிள்ளையானுக்கு வலது கரமாக இருந்தவர்தான் தற்போது தகவல்களை வெளியிட்டுள்ளார். பிள்ளையான் சிறையில் இருக்கும்போது, முஸ்லிம் அடிப்படைவாசதிகளை சந்தித்து, கோட்டாவை வெற்றிபெற வைப்பதற்காக இந்த திட்டத்தை தீட்டினார் என அவர் கூறியுள்ளார்.' என்றார் ஹிருணிக்கா.

# தமிழ் மக்களைக் படுகோலை செய்வதற்கு தமிழர்களும் ஒட்டுக்குழுக்களாக இருந்திருக்கிறார்கள்

(பேரின்பராஜா சபேஷ்)

தமிழ் மக்களைக் படுகொலை செய்வதற்கு தமிழர்களும் ஒட்டுக்குழுக்களாக இருந்திருக்கிறார்கள் என்பது மிகக் கேவலமான வெட்கப்படக்கூடியவிடயமாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மக்களை கொலைசெய்யும் போது அதனைத் தடுக்க முடியாது மௌனிகளாக தலையாட்டுகின்றவர்களாக காட்டிக் கொடுக்கிறவர்களான இருந்துள்ளீர்கள் இது மிகவும் வெட்ககேடான விடயமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.




மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட186 தமிழர்களின் 33வது ஆண்டு நினைவேந்தல் சனிக்கிழமை (09) மலை உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது. நினைவேந்தலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் - 1956ஆம் ஆண்டு முதல் 2009 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அந்த வரிசையில் 1990ஆம் ஆண்டு என்பது மிக முக்கியமான காலம் மட்டக்களப்பு மாவட்டம் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் வந்த நேரம் இராணுவம் பாதுகாக்கும் என்று நம்பி வீடுகளுக்குள் இருந்த மக்கள் வகைதொகை இல்லாமல் கொலை செய்யப்பட்ட நிகழ்வுதான் சத்துருக்கொண்டான் படுகொலையாகும்.

நான்கு கிராமத்தைச் சேர்ந்தவர்களை கூட்டம் ஒன்றிற்கு வருமாறு அழைத்து சென்றவர்களை விசாரணைக்கு அழைத்துச் சென்று கொலை செய்துள்ளார்கள். அந்த சம்பவம் நகழ்தேறி 33 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இறந்தவர்களை புதைத்த புதைகுழி கூட இன்னும் கண்டறியப்படவில்லை.

தற்போது கொக்குத்தொடுவாய்ப் புதைகுழி சதோச புதைகுழி என 30க்கும் மேற்பட்ட புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் சத்துருக்கொண்டான் புதைகுழி இன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. சத்துருக்கொண்டான் படுகொலையை யார் யார் தலைமைதாங்கி செய்தார்கள் என்பதை பாதிக்கப்பட்ட சகோதரரர் தெழிவாக சொல்லியிருந்தார். குற்றம் செய்தவர்களின் பெயர்கள் வெளிப்படையாக கூறப்பட்டிருந்தும் சட்ட நடவடிக்கையெடுக்கப்படவில்லையெனில் இனவாத சக்தி எவ்வளவு உண்மைகளை மூடிமறைத்துக்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

ஆட்சியாளர்கள் எமக்கு நீதியைத் தராவிட்டாலும் தெய்வத்தின் மூலம் கிடைக்கும் நீதியை யாரும் தடுக்க முடியாது.

அண்மையில் அசாத் மௌலானவின் மூலம் பல உண்மைகள் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களைக் படுகொலை செய்வதற்கு தமிழர்களும் ஒட்டுக்குழுக்களாக இருந்திருக்கிறார்கள் என்பது மிகக் கேவலமான வெட்கப்படக்கூடியவிடயமாகும். 1990ஆம் ஆண்டுகாலப்பகுதியிலும் இவ்வாறு இருந்திருக்கிறார்கள்.

கிழக்கு பல்கலைக்கழக படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, புதுக்குடியிருப்பு படுகொலை மகிழடித்துத்தீவில் நடைபெற்ற படுகொலை என பல்வேறு படுகொலைகள் நடைபெற்றிருந்தன இவற்றுக்கு இராணுவம் மாத்திரமின்றி அவர்களுடன் ஒட்டியிருந்தவர்களும் பதில் கூறவேண்டும். படுகொலையாளர்கள் தண்டிக்கப்பட அவர்களது முகத்திரை அகற்றப்பட வேண்டும் என்றார்.

# கல்முனை கானான் ஐக்கியசபை தேவாலயத்தில் 157வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரார்த்தனை





(பாறுக் ஷிஹான்)

இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 15%வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை கல்முனை கானான் ஐக்கியசபை தேவாலயத்தில் உயிர்நீத்த பொலிஸார் மற்றும் மக்களையும் தற்போது நாட்டை பாதுகாக்கும் பொலிஸாருக்கு ஆசி வேண்டி பிரார்த்தனை வழிபாடு இன்று இடம் பெற்றது.

இந்நிகழ்வு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிகாட்டுதலின் கீழ் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் இப்பிரார்த்தனை நிகழ்வினை அருட்சகோதரர்களான ரி.ரவிந்திரகுமார் மற்றும் ஸ்ரிபன் வசந்தகுமார் ஆகியோர் இணைந்து மேற்கொண்டு பொலிஸாருக்கு ஆசி வழங்கினர்.

இந்நிகழ்வில் கல்முனை தலைமையக பொலிஸ் பெரும் குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் ,கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.சிவநாதன் ,பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) மற்றும் ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை பொலிஸ் திணைக்களம் இலங்கை மக்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்களை பாதுகாக்கும் பொறுப்பில் இயங்கி வருகின்றது. இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது 3 அரச நிறுவனங்களில் முக்கிய அரச நிறுவனமாக இலங்கை பொலிஸ் திணைக்களம் காணப்படுகின்றது. 1%96 ம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப்பகுதியை கைப்பற்றியதன் பின்னர் முதல் தடவையாக இலங்கையில் பொலிஸ் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் 1866 ம் ஆண்டு செப்டம்பர் 3 ம் திபதி ஜோர்ஜ் வில்லியம் றொபின்சன் கெம்பல் முதல் பொலிஸ் மா அதிபராக பதவி ஏற்றதை தொடர்ந்து இலங்கை பொலிஸ் சேவை ஆரம்ப்பிக்கப்பட்டது.பின்னர் பொலிஸ் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையின் முதலாவது பொலிஸ் மா அதிபரா சேர் ரிச்சர்ட் அழுவிகாரே 1948 ம் ஆண்டு ஜனவரி 6 ம் திகதி நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த சேவை உண்மையான இலங்கையர்களின் சேவையாக மாறியது.

பொலிஸ் சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் இருந்து போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை உள்ளிட்ட சமூக பிறழ்வு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக மக்களுக்காக பொலிசார் பாரிய பணியாற்றி வருகின்றனர்.

# மட்டக்களப்பில் இரு வேவ்வேறு சம்பவங்களில் இலச்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்ட 3 பேர் கைது

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பில் தனியர் வங்கி ஒன்றில் 18 இலச்சம் ரூபாவை மோசடி செய்த வங்கியில் கடமையாற்றிய ஒருவரும் மற்றும் வெளிநாட்டிற்கு அனுப்புவதாக 16 இலச்சம் ரூபாவை மோசடி செய்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினரும் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் உட்பட 3 பேரை கடந்தவாரம் கைது செய்துள்ளதாக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த 2018ம் ஆண்டு தனியார் வங்கி ஒன்றில் கடமையற்றி வந்த வெளிகள உத்தியோகத்தர் ஒருவர் வங்கியில் கடன் பெற்றவர்கள் மாதாந்தம் வங்கிக்கு செலுத்தும் கடன் கொடுப்பனவான பணத்தை அவர்களின் வீடுகளுக்கு சென்று அறவீடு செய்து வந்துள்ளார்.

இவர் வங்கி கடனை அறவீடு செய்த பணத்தை வங்கிக்கு செலுத்தாமல் 18 இலச்சம் ரூபாவை மோசடி செய்து வந்துள்ள அவருக்கு எதிராக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து குறித்த நபர் தொடர்ந்து தலைமறைவாகி வந்த நிலையில் கடந்த 4ம் திகதி கைது செய்தனர்.

இதேவேளை திக்கோடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பவுதாக தெரிவித்து அவரிடம் 16 இலச்சம் ரூபாவை மோசடி செய்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினரும் கிராம அபிவிருத்தி சங்க தலைவரான இளைஞன் ஒருவரும் அவரின் அயல் வீட்டுக்கார நண்பன் உட்பட இருவரை கடந்த 5ம் திகதி கைது செய்தனர்.

இந்த இரு வெள;வேறு சம்பவங்களில் கைது செய்தவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்களை நீதிமன்ற பிணையில் விடுவித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# மட்டு சத்துருக் கோண்டான் 186 போதுமக்கள் படுகோலையின் 33 ஆவது நினைவஞ்சலி





( கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் 186 பொதுமக்கள் படுகொலை 33 வது ஆண்டு நினைவு அஞ்சலி சத்துருக்கொண்டான் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவு தூபியில் சனிக்கிழமை (9) மாலையில் ஈகைசுடர் ஏற்றி எழுச்சி பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1990 ம் ஆண்டு சத்துருக்கொண்டான் பனிச்சையடி ,கொக்குவில், பிள்ளையாரடி ஆகிய கிராமங்களை இராணுவம் சுற்றிவளைத்து அங்கு வீடுகளில் இருந்த பெண்கள் ஆண்கள் உட்பட 186 பேரை கூட்டத்துக்கு என அழைத்துச் சென்று அவர்களை துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

இந்த படுகொலையின் 33 வதது நினைவஞ்சலி பிரதேச பொது மக்களின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சந்தியில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் உறவுகளை பறிகொடுத்தவர்களின் உறுவினர்கள் அரசியல்வாதிகள் கிறிஸ்தவ பாதிரியார்கள் பொது அமைப்புக்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு நினைவு தூபியில் விளக்கேற்றி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்வர்களுக்கு இலங்கை நீதி விசாரணையில் நம்பிக்கையில்லை எனவும் சர்வதேச நீதிவிசாரணை வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்தினர்.

# சாய்ந்தமருதில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நினைவு தினமும், பரிசளிப்பு நிகழ்வும்

(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் மற்றும் சாய்ந்தமருது கமு/கமு/எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம் இணைந்து நடத்திய 'மகாகவி பாரதியார் நினைவு தினமும், பரிசளிப்பு நிகழ்வும்' சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்சானின் நெறிப்படுத்தலில் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிஃப் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் (11) நடைபெற்றது.





இந்நிகழ்வில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி முன்னாள் அதிபரும், சட்டத்தரணியுமான எம்.சி. ஆதம்பாவா பிரதம அதிதியாககலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு முன்மாதிரியான கற்பித்தல் முறைகள் தொடர்பிலும், பாடசாலை ஒழுக்க நெறி தொடர்பிலும், நாட்டின் தற்கால நிலைகள் பற்றியும் சிறப்புரை நிகழ்த்தினார். மகாகவி பாரதியார் நினைவுதினபிரதானஉரையை சிரேஷ்ட இலக்கியவாதியும், ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ. பீர் முகம்மட் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கமு/கமு/எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபீத், ஓய்வு பெற்ற மூத்த ஆசிரியர் ஏ.எம். இப்ராலெப்பை, சாய்ந்தமருது கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எச். சபீகா, சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. பி. நௌசாத், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி சபை செயலாளர் அஸ்வான் எஸ் மௌலானா, பிரதி செயலாளர் யூ. எல். என். ஹுதா உமர், சாய்ந்தமருது கமு/கமு/எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனபலரும் கலந்து கொண்டனர்.

## ஈஸ்ரர் குண்டு தாக்குதலுக்கு சர்வதேச விசாணை கோரும் சரத்பென்சேக்கா

# 2009 முள்ளிவாய்க்கால் இனழிப்புக்கு அவர் மீது சர்வதேச விசாரணை வேண்டும்

(கனகராசா சரவணன்)

ஈஸ்ரர் குண்டு வெடிப்புக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என தெரிவிக்கும் சரத்பொன்சேக்கா 2009 ம் ஒரு இலச்சத்து 50 ஆயித்துக்கு மேற்பட்ட மக்கள் இறக்கும் போது அவர் இராணுத் தளபதியாக இருந்தவர். எனவே அவர் அவர்களுக்கு என்ன நடந்தது என பதில் கூறவேண்டும் அல்லது அவர் மீதும் 2009 வரை வடகிழக்கில் இடம்பெற்ற தமிழர் மீதான படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என நா.ம. உறுப்பினர் கோ. கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிகரையிலுள் நா.மன்ற உறுப்பினரது காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது பேசும் பொருளாக இருக்கும் ஈஸ்ரர் குண்டுதாக்குதலுடன் சம்மந்தப்பட்வர்கள் தொடர்பாக பிரித்தானியாவில் இருந்து சனல் 4 ஊடகம் ஆவணம் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இந்த சம்பவம் பலரது உண்மை முகத்தை மக்களுக்கு தெரியபடுத்தியுள்ளது அந்தவகையில் ஈஸ்ரர் குண்டுவெடிப்புக்கான சூத்திரதாரிகள் யார் என்பதை மக்கள் உணர்ந்திருக்கின்றனர். இந்த குண்டு வெடிப்பிலே மட்டக்களப்பில் 31 பேரும் மற்றும் 40 வெளிநாட்டவர்கள் உட்பட 250 மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த உண்மைகளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியமானவரும் ஊடக பேச்சாளருமாக கடந்த காலத்தில் செயற்பட்டு வந்த ஆசாத் மௌலான வெளி நாட்டில் தஞ்சமைந்து வெளி படுத்தியுள்ளார்.

இந்து குண்டு வெடிப்பில் நியாயம் கோரி இன்று சர்வதேச விசாரணை வேண்டும் என பேராயர் ரஞ்சித் மல்கம். எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸா, சரத்பொன்சேக்கா, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அரசியல் கட்சிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். இந்த நாட்டிலே உள்நாட்டு விசாரணைக்கு எந்த விதமான நம்பிக்கையும் இல்லை என்பது இவர்களுக்கு தெரியும். ஏன் என்றால் இந்த குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணைக்கு பொறுப்பாக இருந்து விசாரணை செய்து கொண்டிருந்தவர் 2019ம் ஆண்டு கோட்பாய ஜனாதிபதியாக வந்ததும் அவர் இந்த நாட்டை விட்டு தப்பி சென்றுள்ளார்.

கோட்பாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது அவரையம் விசாரணைக்கு அழைத்த அவர் தனது உயிருக்கு உத்தரவாம் இருக்கர் என்ற காரணத்தால் அவர் நாட்டை விட்டு தப்பி சென்றுள்ள அவரும் பல உண்மைகளை கூறிவருகின்றார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் குற்றம்; செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இந்த நிலையில் த.ம.வி.புலிகள் கட்சியினர் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என கோஷம் எழுப்பி இன்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர் எனவே இந்த சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை கொடுக்கவேண்டும்.

ஆசாத் மௌலான கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக கொண்டுவருவதற்காக த.ம.வி.புலிகள் கட்சி தலைவர் அதன் உறுப்பினர்களையும் பாவித்ததாக குற்றம் சாட்டியுள்ளார் எனவே அவர்களுடன் இருந்து செயற்பட்ட மௌலானாகூட ஒரு குறறவாளியாக கருதப்படுவார்.

சர்வதேச விசாரணை என்று கேட்பவர்கள் அரசியல் ரீதியாக தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்கா இந்த குண்டு வெடிப்பையும் மக்களது உயிர்களை வைத்து அரசியல் சித்து விளையாட்டு காட்டாமல் இந்த நாட்டிலே 2009 வரை கொல்லப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட அத்தனை உயிர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும்

அது மாத்திரமல்ல கொக்கு தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்படும் உடல்கள் யுத்த இறுதிகட்டத்தில் சரணடைந்தவர்களது உடல்களாக இருக்க கூடும் எனவே அனைத்து படுகொலைகளுக்கும் சர்வதேச விசாரணை வேண்டும்.

2022 நாட்டில் அறக்களை ஊடகா ஆட்சி மாற்றம் இடம்பெற்றது இந்த நிலையில் அந்த போராட்டக்காரர்களை இப்போது தேடி தேடி கைது செய்யும் இந்த அரசாங்கம் ஈஸ்ரர் குண்டு வெடிப்புடன் சம்மந்தபட்வர்கள் என கூறப்படுபவர்களை அந்த நேரத்தில் கைது செய்திருந்தால் இந்த நிலமை வந்திருக்காது.

ஈஸ்ரர் குண்டுதாக்குதலுக்கு முன்னர் காத்தான்குடியில் பரீட்சாத்தமாக மோட்டர் சைக்கிள் குண்டுதாக்குதல் நடாத்தியதில் ஸாரானின் சகோதரன் காயமடைந்தார் அவரை கைது செய்யவில்லை வவுணதீவில் இரு பொலிசார் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும்; கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்களை எடுத்துச் சென்றவர்களை தேடிக்கண்டுபிடிக்காத அந்த அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்துள்ளனர்.

2019 ஆட்சி மாற்றத்தை கொண்டுவருவதற்காக இந்த அத்தனை உயிர்களையும் பறிகொடுத்து இரத்த கறையுடன் அந்த ஆட்சிக்கு வந்த கோடபாய ராஜபக்ஷ 2 வருடம் கடந்த நிலையில் இருப்பதற்கு இடமில்லால் துரத்தியடிக்கப்பட்டிருந்தார் அந்த வகையில் இந்த நாட்டில் நீதிதுறை எப்படி இருக்கின்றது என்பதை சிந்தித்து பார்க வேண்டும.

இந்த குண்டு வெடிப்புக்கு திட்டங்கள் சிறைச்சாலையில் தீட்டப்பட்டுள்ளது எனவே இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக சர்வதேச விசாரணை ஊடாக கண்டுபிடித்து சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்குவது மாத்திரமல்ல வடகிழக்கில் இடம்பெற்ற அநியாயங்களுக்கும் கொலை, கடத்தலுகளுக்கு ஒரு நியாயம் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என்றர்.

## கூடைப்பந்தாட்ட தேசியமட்ட போட்டிக்கு காரைதீவு அணி தெரிவு



( வி.ரி. சகாதேவராஜா)

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் கழக மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்ட போட்டிகள் காரைதீவு மைதானத்தில் (10) இடம்பெற்றது..

இப்போட்டிகளில் இறுதி போட்டியில் காரைதீவு பிரதேசசெயலக பிரிவு அணி கல்முனை வடக்கு பிரதேச செயலக அணியுடன் மோதியது.

அதில் காரைதீவு அணி வெற்றி பெற்றது. அடுத்த மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ள தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ள அவ் அணி தெரிவு செய்யப்பட்டது.

காரைதீவு அணி சார்பாக ராமகிருஷ்ணா இளைஞர் அணியினர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இரண்டாமிடத்தை கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு அணியினர் பெற்றுகொண்டனர்.

காரைதீவு இராமகிருஷ்ண இளைஞர் அணி ஏலவே ஆண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியிலும் வெற்றி பெற்று தேசிய போட்டிக்கு தெரிவானது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் மதுபானத்தை வாங்கி கோண்டு பணம் கோடுக்காமல்

# தப்பி ஓடிய பொலிஸ் பரிசோதகர் பணியில் இருந்து இடைநிறுத்தம்

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பில் மதுபானசாலையில் மதுபானத்தை வாங்கி கொண்;டு பணம் கொடுக்காது முச்சக்கரவண்டியில் தப்பி ஓடிய பொலிஸ் பரிசோதகர் சேவையில் இருந்து சனிக்கிழமை (09) இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டு நகரிலுள்ள மதுபானசாலைகள் இரண்டில் சம்பவதினமான வெள்ளிக்கிழமை பகல் முச்சக்கரவண்டி ஒன்றில் சென்று மதுபானசாடியில் அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டு பணம் முச்சக்கரவண்டியில் இருப்பாதாகவும் ணடண்டு வந்து தருவதாக தெரிவித்து மதுபானத்தை வாங்கி கொண்டு பணத்தை கொடுக்காது முச்சக்கரவணடியில் தப்பி ஓடிய சம்பவம் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரி கமராவில் பதிவாகியதுடன் அது ஊடகங்களில் வெளியாகியது.

இந்த நிலையில் குறித்த பொலிஸ் பரிசோதகர் வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் அவர் சம்பவ தினம் பொலிஸ் நிலையத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு செல்வதாக கடமைகையேறட்டில் பதிவிட்டுவிட்டு வெளியேறி இந்த மோசடியில் ஈடுபட்ட பின்னர் அவர் பொலிஸ் நிலையத்துக்கு திரும்பது தலைமறைவாகியுள்ளார்.

குறித் பொலிஸ் பரிசோதகர் ஏற்கனவே தங்க மாலை அறுத்து திருடிய குற்றச்சாட்டு உட்பட % குற்றச்சாட்டுக்கள் காரணமாக 7 தரம் பணி இடை நிறுத்தப்பட்டு மீண்டும் சேவையழல் சேர்ந்து கடமையாற்றிவநு;துள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிசாருக்கு அபகீத்தியை ஏற்படுத்திய அவரை உடனடியாக பணி இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மாகாணத்தில் மூன்றாம் நிலை

அண்மையில் வெளியாகிய கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேருக்கு அமைய கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மூன்றாம் நிலையை பெற்றுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றவர்கள் சித்தி வீதத்தின் அடிப்படையில் இந்நிலையை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் அடைந்துள்ளது. 77.7 வீத சித்தியைப் பெற்று இந்நிலைக்கு வந்துள்ளது.

மாகாணத்தில் மூதூர் கல்வி வலயம் முதலிடத்தினையும் கிண்ணியா கல்வி வலயம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளது. முன்னாள் வலயக்கல்வி பணிப்பாளரும் தற்போதைய மாகாண கல்விப் பணிப்பாளருமான செல்வி அகிலா கனகசூரியம் அவர்களின் திட்டமிடலிலும் வழிகாட்டலிலும் ஆலோசனைக்கும் விசேட செயற்றிட்டக்களுக்கும் அமைய வலய பிரதி கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மாணவர்களின் முயற்சியினால் இப்பெறுபேறு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கல்வி வலயம் ஆரம்ப காலங்களில் தேசிய பரீட்சைகளில் இறுதி நிலையில் காணப்பட்ட போதும் அகிலா கனகசூரியம் வலயக் கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்றதை தொடர்ந்து படிப்படியாக வலயம் உயர் நிலையை பெற்று வந்துள்ளமை எடுத்துக் காட்டத்தக்கது.

## அம்பாறை நகர சபை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட டேன்னிஸ் விளையாட்டு கூடம்







(பாறுக் ஷிஹான்)

அம்பாறை நகர சபை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட டென்னிஸ் விளையாட்டு கூடம் ( tennis court ) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ச, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (D-I-G) எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய சிறி, இலங்கை டென்னிஸ் சங்கத்தின் தவிசாளர் இக்பால் பின் இஸ்ஹாக் , இலங்கை இராணுவத்தின் 24 வது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி, உள்ளிட்ட அதிதிகள் இணைந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட டெனிஸ் திடல் பெயர் பலகை திரைநீக்கம் செய்து வைத்தனர்.

அத்துடன் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (D-IG ) எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய சிறி உள்ளிட்ட அதிதிகள் டென்னிஸ் விளையாட்டு கூடத்தை பார்வையிட்டதுடன் டென்னிஸ் விளையாட்டிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வரவேற்புரை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு திடல் தொடர்பிலான பெட்டக காட்சி அத்துடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய டெனிஸ் திடல் அம்பாறை நகர சபை நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டதுடன் டென்னிஸ் விளையாட்டு துறையின் அபிவிருத்தி மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்தும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் , கிழக்கு மாகாண முப்படை உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார் ,பொதுமக்கள், என பலரும் கலந்து கொண்டனர்.

இது தவிர டென்னிஸ் மைதானத்தை நிர்மாணிப்பதற்கான பணியாளர்களை இலங்கை இராணுவம் இலங்கை பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் பங்களிப்புகளை வழங்கி இருந்தது.இந்த மைதானத்தை நிர்மாணிப்பதற்காக அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய ஸ்ரீ முன்னின்று வழிநடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## உலருணவுப் போதிகள் வழங்கிய நிகழ்வு





(ஏறாவூர் நிருபர் - நாஸர்)

ஹஸன் மௌலவி பவுண்டேஷன் மற்றும் அஸீஸா பவுண்டேஷன் ஆகிய நிறுவனங்கள் இணைந்து மட்டக்களப்பு - ஏறாவூரிலுள்ள பள்ளிவாயல்களின் இமாம்கள், முஅந்தின் மார்கள் மற்றும் மௌலவிமார்கள் 225 பேருக்கு உலருணவுப்பொதிகள் வழங்கிய நிகழ்வு ஏறாவூர் முகைதீன் ஜ¬ம்ஆ பெரிய பள்ளிவாயலில் 10.09.2023 நடைபெற்றது.

ஜம்இய்யது உலமா சபையின் புதிய தலைவர் மௌலவி ஏஎல் ஸாஜித் ஹ¬ஸைன் பாகவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளருமான எம்எஸ். சுபைர் , குறித்த நிறுவனங்களின் பணிப்பாளர் சாதிக் ஹஸன் மற்றும் பிரதிநிதி முகமட் றிஸான் ஆகியோர் அதிதிகளாகக்கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை பயனாளிகளிடம் கையளித்தனர்.இதன்போது அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளருமான எம்எஸ். சுபைர் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு உலருணவுப்பொதிகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு கள விஜயம்





(எம்.ஏ.ஏ.அக்தார்)

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி. அகிலா கனகசூரியம் களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டு காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை வருகை தந்ததிருந்தார்.

பாடசாலையின் அதிபர் எம்.ஏ. நிஹால் அஹமட் தலைமையில் பாடசாலையின் பல்வேறு விஷேட செயற்திட்டங்கள், பரீட்சை பெறுபேறுகள், விளையாட்டுத்துறை அடைவுகள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், இரு மொழி மூல கற்கை நெறி வகுப்பறைகள் மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பில் முழுமையாக கல்விப்பணிப்பாளர் ஆய்வு செய்தார்.

குறைந்த செலவுடன் ஆய்வுகூட மொன்றுக்கான பரிசோதனை பொருட்களை எவ்வாறு பெற்று பயன்படுத்துவது தொடர்பிலும் பாடசாலை விஞ்ஞான பாட ஆசிரியர் எஸ்.எம்.ஸன்ஸீர் அவர்களினால் பணிப்பாளருக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் மாணவர்களின் பல்வேறு புத்தாக்க முயற்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகளை பார்வையிட்டதோடு அவர்களின் பெற்றோர்களுடன் சந்தித்து கலந்துரையாடி தன்னுடைய விஷேட வாழ்த்துக்களை குறிப்பாக அதிபருக்கும் பாடசாலை சமூகத்துக்கும் தெரிவித்தார் .

இவ் விஜயம் தொடர்பாக கருத்து தெரிவித்த மாகாண கல்விப் பணிப்பாளர், இப்பாடசாலையானது குறுகிய காலத்தில் பெரும் அடைவுகளை கண்டுள்ளமை தொடர்பிலும் எதிர்காலத்திலும் பல்வேறு அடைவுகளை தேசிய ரீதியில் பெற வாழ்த்தியதோடு இரு மொழி மூலமான கல்வியை கற்பதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டிருந்தார்.

இக்கள விஜயத்தில் மட்டக்களப்பு மத்தி முகாமைத்துவத்துக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம்.எச்.எம்.றமீஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது மாகாணக்கல்விப்பணிப்பாளருக்கு பாடசாலை சமூகம் சார்பாக நினைவுச்சின்னமொன்றும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள்,பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

# புகையிரதத்தில் மோதுண்டு யானை உயிரிழந்தது



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஞாயிற்றுக்கிழமை (10) இரவு புறப்பட்டு வந்த ‘புலதுசி’ புகையிரத வண்டியில், வெலிகந்த பகுதியில் வைத்து யானை மோதுண்டது. இதில் குறித்த யானை சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளது.

இதனால் குறித்த புகையிரதப் பாதை ஊடான போக்குவரத்தும்சில மணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

# அவுஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் விழா
## தாமரைச் செல்விக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது!





(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் செப்டெம்பர் 10 ஆம் திகதி, சிட்னியில் நடத்திய 23 ஆவது தமிழ் எழுத்தாளர் விழாவில் , படைப்பிலக்கியவாதி தாமரைச்செல்வியின் ஐம்பது ஆண்டுகால இலக்கியச்சேவையை பாராட்டி சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

சிட்னியில் தூங்காபி (Toongabbie) சமூக மண்டபத்தில் காலை அரங்கு- தமிழ்மொழி வாழ்த்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அவுஸ்திரேலியத் தேசிய கீதத்தை தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் இசைத்துப் பாடினர்.

விழாவின் வரவேற்புரையை கலாநிதி கார்த்திகா கணேசர் நிகழ்த்தினார். அதன்பின் பிரதம அதிதி கம்பர்லாந்து நகர மேயர் லீஷா லேக்கை (Lisa Lake , Mayor, Cumberland City Council) கலாநிதி சந்திரிகா சுப்ரமணியன் வரவேற்று உரையாற்றினார்.

அதன்பின் இளம் தமிழ் எழுத்தாளர்களுக்கான சான்றிதழ்கள் பிரதம அதிதி கம்பர்லாந்து மேயரால் வழங்கப்பட்டது. இந்த எழுத்தாளர் விழாவில் முக்கிய நிகழ்வாக



அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் இலக்கியப்படைப்பாளி தாமரைச்செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பை பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

தாமரைச்செல்வியின் இலக்கியச்சேவையை பாராட்டி, சங்கத்தின் நிறுவன உறுப்பினரும் தற்போதைய துணை நிதிச்செயலாளருமான எழுத்தாளர் லெ.முருகபூபதி ஆய்வுரை நிகழ்த்தினார்.

**புத்தக கண்காட்சி - நூல் வாசிப்பு :**

இவ்விழாவில் அவுஸ்திரேலியாவில் வதியும் பல எழுத்தாளர்களின் நூல்களின் கண்காட்சியும் இடம்பெற்றது. அவுஸ்திரேலியாவில் வசியும் தமிழ் எழுத்தாளர்களின் நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வும் இவ் எழுத்தாளர் விழாவில் நடைபெற்றது. நொயல் நடேசன் எழுதிய தாத்தாவின் வீடு நாவலுக்கான வாசிப்பு அனுபவப் பகிர்வை ரஞ்சகுமார் ஆற்றினார்.

தேவகி கருணாகரன் எழுதிய அவள் ஒரு பூங்கொத்து சிறுகதை தொகுப்புக்கான நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வு உரையை சௌந்தரி கணேசன் ஆற்றினார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்த ˀஇலங்கை இதழியலில் சிவகுருநாதன்ˀ கட்டுரை தொகுப்பு நூலுக்கான வாசிப்பு அனுபவப் பகிர்வு உரையை

ம. தனபாலசிங்கம் ஆற்றினார். லெ. முருகபூபதி எழுதிய சினிமா பார்த்ததும் கேட்டதும் கட்டுரை தொகுதிக்கான உரையை கிறிஸ்டி நல்லரெத்தினம் ஆற்றினார். அத்துடன் சந்திரிக்கா சுப்பிரமணியனின் பெண் நூறு நூலின் வாசிப்பு அனுபவ உரையை இந்துமதி ˀரீநிவாசன் ஆற்றினார்.

**எழுத்தாளர் விழாவின் மாலை அரங்கில்**

‘மலையகம் 200’ சிறப்பு நிகழ்வை வாசுகி சித்திரசேனன் தலைமை தாங்கி நடாத்தினார். இதன்போது ‘மலையகம் 200’ எழுச்சி யாத்திரை ஒளிப்பதிவும் காண்பிக்கப்பட்டது.

அத்துடன் நிகல்கால எழுத்தாள ஆளுமைகளின் காணலைகளும் காண்பிக்கப்பட்டது. மல்லியப்பு திலகர், கனடா மீரா பாரதி, ஆகியோரின் காணலை பதிவுகள் காண்பிக்கப்பட்டன.

மாலை அரங்கின் இறுதியில் தமிழ் பாலர் பள்ளி இளஞ்சிறார்களின் இசை நாட்டியமும் மனதை கவர்ந்தது.

நிகழ்ச்சியின் இறுதியில் நன்றியுரையை அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் ஆற்றினார். இந்நிகழ்வில் பெருந்திரளான இலக்கிய ஆர்வலர்களும், பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 157 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு முருகன் தேவஸ்தான ஆலயத்தில் பிரார்த்தனை வழிபாடு







(பாறுக் ஷிஹான்)

இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 157 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை முருகன் தேவஸ்தான ஆலயத்தில் உயிர் நீத்த பொலிஸார் மற்றும் மக்களையும் தற்போது நாட்டை பாதுகாக்கும் பொலிஸாருக்கு ஆசி வேண்டி பிரார்த்தனை வழிபாடு இன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிகாட்டுதலின் கீழ் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் இப்பிரார்த்தனை நிகழ்வினை கல்முனை முருகன் தேவஸ்தான ஆலய பிரதம குருக்கள் கந்தசாமி சச்சிதானந்த சிவ குருக்கள் மேற்கொண்டு பொலிஸாருக்கு ஆசி வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்முனை தலைமையக பொலிஸ் பெரும் குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் ,கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.சிவநாதன் ,பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) மற்றும் ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை பொலிஸ் திணைக்களம் இலங்கை மக்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்களை பாதுகாக்கும் பொறுப்பில் இயங்கி வருகின்றது. இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது 3 அரச நிறுவனங்களில் முக்கிய அரச நிறுவனமாக இலங்கை பொலிஸ் திணைக்களம் காணப்படுகின்றது. 1%96 ம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப்பகுதியை கைப்பற்றியதன் பின்னர் முதல் தடவையாக இலங்கையில் பொலிஸ் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் 1866 ம் ஆண்டு செப்டம்பர் 3 ம் திபதி ஜோர்ஜ் வில்லியம் ரொபின்சன் கெம்பல் முதல் பொலிஸ் மா அதிபராக பதவி ஏற்றதை தொடர்ந்து இலங்கை பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.பின்னர் பொலிஸ் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையின் முதலாவது பொலிஸ் மா அதிபரா சேர் ரிச்சர்ட் அழுவிகாரே 1948 ம் ஆண்டு ஜனவரி 6 ம் திகதி நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த சேவை உண்மையான இலங்கையர்களின் சேவையாக மாறியது.

பொலிஸ் சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் இருந்து போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை உள்ளிட்ட சமூக பிறழ்வு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக மக்களுக்காக பொலிசார் பாரிய பணியாற்றி வருகின்றனர்.

# வீரகெட்டியவில் புதுமணத் தம்பதிகள் விபத்தில் பலி

(எம்.ஏ.ஏ.அக்தார்)

ஹம்பாந்தோட்ட- வீரகெட்டிய பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் உறவினர் வீட்டுக்கு சென்ற திருமணம் முடித்து ஒரு வாரமே ஆகிய புது மணச்தம்பதிகள் விபத்தொன்றில் உயிரிழந்துள்ளதாக சம்பவம் இப்பிரதேசத்தை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இவர்கள் இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாதையோரத்திரத்திலிருந்த மரத்துடன் மோதுண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

31 வயதுடைய கணவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மனைவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



## எழுதத் தூண்டும் எண்ணங்கள் – 15

# முதியோர் முதுமையை எதிர்கோண்டு வாழ்பவர்களாக

*சோதனை மிகுந்தது முதுமைக்காலம்
சோதனைகளைச் சாதனைகளாக்கிச்
சாதித்துவிடலாம் முதுமைக் காலத்தில்*

ஒவ்வொரு மனிதனும் தாம் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகிறான். அதையே விரும்புகிறான். இறப்பு நிச்சயம் என்று தெரிந்திருந்தும் குறிப்பிட்ட சிலரைத் தவிர வேறு எவரும் மரணத்தை விரும்புவதில்லை. 'ஆடி அடங்கும் வாக்கை, ஆறடி நிலத்துள் அடங்கும் வாழ்க்கை' 'உயிரைத் தந்தவன் கேட்கிறான் இல்லை என்றால் அவன் விடுவானா' உயிரும் நமக்குரியதல்ல, உடம்பும் நமக்குரியதல்ல. நமக்குரியதல்லாதவைகளை வைத்துக் கொண்டு நம் வாழ்க்கை நிரந்தரமானதெனக் கருதிப் பலர் உலகியலை மறந்து ஆட்டம் போடுகின்றனர். பிறப்பு, பிணி(நோய்), மூப்பு(முதுமை), சாக்காடு(இறப்பு) ஆகிய நான்கும் நிரந்தரமானவை. உறுதியானவை. இதில் இருந்து யாரும் தப்பிக் கொள்ள முடியாது. ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்டபடி ஒவ்வொன்றும் நடந்தே தீரும். இவற்றைப் புரிந்து கொண்டு வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் சந்தோசமாக நடத்துவதே சிறந்ததாகும்.

விதிக்கப்பட்டதன்படி நமது வாழ்க்கை அமைகிறது என்பார்கள். முயற்சி, நம்பிக்கை, வலிகளினால் கிடைத்த அனுபவம், புத்திசாதுரியம் ஆகியவற்றால் விதியையும் மதியால் வெல்லலாம் என்றும் கூறுவார்கள். முடியாது என்று எதுவுமில்லை. முடித்துவிட முயற்சி செய்து, களத்தில் இறங்கிச் செயற்படுபவனே சாதனையாளன் ஆகின்றான். சாதிக்க நினைப்பவனுக்கு வயது என்று எதுவும் தேவையில்லை. நம்பிக்கை இருந்தால் எந்த வயதிலும் எதனையும் சாதிக்கலாம். தடுக்கி விழுந்து, தடுமாறி, முடியாது என்று சோர்ந்திருந்தால் வாழ்க்கையில் எதனையும் தமதாக்க முடியாது. நாம் முயற்சிக்காத போது நமக்குக் கிடைத்திருக்க வேண்டிய வாய்ப்புக்கள் யாவும் நம்மைவிட்டுச் சென்றுவிடும். பெருமூச்சு விட்டுக்கொண்டு முடங்கி இருப்பது வாழ்க்கை ஆகாது. 'வாழும்போது செத்துச் செத்துப் பிழைப்பவன் மனிதனல்ல. சோதனைகள் வேதனைகளை எதிர்த்து நின்று தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க நினைப்பவனே நம்பிக்கையுள்ள மனிதனாவான். இறக்கும் வரை எந்த வயதிலும் சாதிக்கலாம். வாழ்க்கையைச் சுமையாக நினைத்தால் சுமையாகவே இருக்கும். சுமை என்று கருதுவதெல்லாம் நிரந்தரமானதல்ல. 'போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும், தொடர்ந்து செல்வேன் என் இலட்சியத்தின் எல்லை நோக்கி' என்பது முயற்சியாளனுக்கான நம்பிக்கையை ஊட்டும் மந்திர வாசகம்.

'துணிந்தவனுக்குத் தூக்கு மேடை கூடப் பஞ்சு மெத்தை ஆகிவிடும்' ஆரம்பத்தில் எதுவும் புரியாது. புரிந்துவிட்டால் எல்லாம் தெளிவாகிவிடும். 'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும்..' இதுதான் வாழ்க்கை என நினைத்துக் கொண்டு தோல்விகளையும் வேதனைகளையும் கழைந்துவிட்டு உடல் ஊனத்திலும் சாதிக்கிறானே அவனையும் பார்த்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். ஐம்பது வயதின் பின்னர் முதுமையும் சேர்ந்து வர ஆரம்பிக்கும். அறுபது ஆகும்போது உடல் தளர்வுற ஆரம்பிக்கும். இறுக்கமாய் இருந்த தசைகள் இழகும். மூட்டுக்களில் ஆங்காங்கே வலிகள் தோன்றும். பலருக்கு நீரிழிவு, உயர் குருதி அமுத்தம் எனப் பல தொற்றா நொய்கள் உருவாகும். கழைப்பு, உடல் சோர்வு, கண்பார்வை இழப்பு, கை, கால் விறைப்பு, உடல் நடுக்கம், பதட்டம், உள நெருக்கீடு, உபாதைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்ந்து வரும். குடும்பததில் உள்ளவர்களுக்குப் புதிய உறவுகள் சேரும்போது கவனிப்புக்கள் குறையும். எதிர்பார்ப்புக்கள் அதிகரிக்கும். தனிமையில் இருப்பதாக உணர்வோம். அன்பு, பரிவு என்பவற்றுக்கான ஏக்கம் அதிகரிக்கும். மரண பயம் ஏற்படும். இவை எல்லாம் முதுமைக் காலத்துக்குரிய இயல்பான வெளிப்பாடுகளாகும். இவற்றைச் சமாளித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். முதுமைக் காலத்தில் சந்தோசமாக வாழ்வதற்குரிய பக்குவத்தை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பல இலக்கிய விருதுகள் பெற்ற ட்ராவுன் டக்கன் எழுதி அண்மையில் வெளிவந்த கூஏஉ குஓங எஉகூ ஈஅ கீஓ (வானம் இருள்கிறது) என்ற பிரபல்யமான நாவல் முதுமைக் காலம் பற்றிய உணர்வலைகளைதத்ரூபமாக வெளிக் கொணர்கிறது. ஐம்பது வயதாகும் வரையும் நாம் வாழ்க்கையில் சேர்த்துக் கொண்டிருப்போம். ஐம்பது வயதின் பின்னர் செலவு காலம் ஆரம்பித்துவிடும்.



சோலையூர்
குருபரன்



நாம் அறியாமலே நம்மைவிட்டு ஒவ்வொன்றாகப் பிரிந்து சென்று கொண்டிருக்கும். நாம் விரும்பியவை, சேர்த்தவை, நேசித்தவை, பலம் என்று நம்பியவை, செல்வாக்கு என்று நம்மோடு இருந்தவை யாவும் ஒவ்வொன்றாகப் பிரிந்து செல்வதை உணர்வீர்கள். நமது கையில் ஒன்றும் வைத்துக் கொள்ளாது குடும்பம், சகோதரங்கள், உறவுகள், சமூக சேவை என்று செலவு செய்திருப்போம். அறுபது, எழுபது வயதின் பின்னர் எல்லாவற்றையும் உணரும்போது நம்மிடம் பல இருக்காது.

ஓடியோடி உழைத்துச் சேர்த்து வைத்த செல்வங்களைச் சிலரைத்தவிர மற்றைய எல்லோரும் அனுபவிககாமலே வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றனர். விதவிதமாகச் சந்தோசமாக வாழலாம் எனச் சேர்த்து வைத்தவர்கள் யாவற்றையும் இழந்து முதியோர் இல்லங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் பலரைக் கண்டிருக்கிறோம். தமது பிள்ளைகளை முதலீடு, செல்வமாகக் கருதி அவர்கள் தன்னைப்போல் துன்பப்படக் கூடாது எனப் பார்த்துப் பார்த்துச் செய்த பலரைப் பிள்ளைகள் சுமையாகக் கருதியதையும் கண்டிருக்கிறோம். சிலர் முதுமையிலும் பிள்ளைகள் பேரப் பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்வதையும் பார்த்திருக்கிறோம். இன்னும் சிலர் முதுமைக் காலத்தில் பிள்ளைகளின் வேலைக்காரர்களாக இருப்பதையும் கண்டிருக்கிறோம். கீழைத்தேச நாடுகளில் வாழும் %0 வீதத்துக்கு மேற்பட்ட முதியவர்கள் நிம்மதி இழந்து பல ஏக்கங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பலர் சேர்த்த செல்வங்கள் யாவற்றையும் மனைவி, மக்களுக்குக் கொடுத்துவிட்டு தமது தேவையை நிறைவேற்றுவதற்குக் கையேந்தி நிற்கும்போது உங்களுக்கென்ன செலவு சும்மா கிடவுங்க' எனக் கூறக் கேட்டு வேதனைகளுடன் வாழ்வதையும் பார்த்திருக்கிறோம். சிலர் 'இதுதான் வாழ்க்கை என்று முடிவாகிவிட்டால் வாழ்ந்துதான் பார்ப்போம்' என அதனை எதிர்கொண்டு வாழ்வதையும் கண்டிருக்கிறோம்.

இரண்டு தசாப்த காலத்தில் இருந்து முதியோர்கள் பலர் வீடுகளில் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது தொடர்பாகப் பல தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அதிலும் திறன் கைப்பேசிப் (Smart Phone) பாவனை அதிகரித்துக் கொண்டு செல்வதனால் உணவு இல்லாவிட்டாலும் பறவாயில்லை கைப்பேசிகளுக்கு பணத்தை மீள்நிரப்பிக் கொண்டு எந்த நேரமும் கையோடு கொண்டு திரிகின்றனர். சிறிது நேரம் கிடைத்தால் போதும் ஓரிடத்தில் ஒதுங்கிவிடுவர். இப்போது பிள்ளைகளுக்கு உணவூட்டுவதற்காகத் தாய்மார் திறன்பேசிபை' பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டு பிள்ளைகள் ஏதோ ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது உணவைத் திணித்து விடுகின்றனர். பிள்ளையும் கைப்பேசியில் லயித்துப்போய் உணவை மென்று உண்ணாமல் திணித்த உணவை வாய்க்குள் வைத்துக் கொண்டு அம்மாவின் எச்சரிக்கை கேட்டு விழுங்கிவிடுகின்றன. தாய்மார் பிள்ளைக்குச் சாப்பாடு கொடுக்க வேண்டும் என்பதனால் உடல் நலம், கணபார்வை இழப்பு என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது உணவைக் கொடுத்து விடுகின்றார்கள். இவ்வாறே வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு திறன்பேசியோடு ஒதுங்கி விடுவதனால் பல முதியோர் தனிமையில் இருந்து உளரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். இன்று திறன் பேசிகள் பலரை மயக்கத்தில் வைத்து இயக்கிக் கொண்டிருக்கின்றன.

பெரும்பாலான முதியோர் 65 - %0 வயதக்குள் உடல், உளரீதியாகவும் நடத்தையிலும் குழந்தை போல் ஆகிவிடுவர். அன்பு, அரவணைப்பு, பாதுகாபபு, தேவை நிறைவேற்றம் என்பவற்றுக்காக ஏக்கம், எதிர்பார்ப்பு, கவலை ஆகியன அதிகரித்துக் கொண்டே செல்லும். நம்மைக் கவனிக்கப்படவில்லை நம்மைப் புறக்கணிக்கிறார்கள், ஒக்குகிறார்கள் என்றெல்லாம் எண்ணத் தோன்றும். திடீர் திடீரென மன உறுதியை இழந்துவிடுவார்கள். குழந்தைப் பிள்ளைகள் போல் ஏதோ ஒரு உலகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்து விடுவார்கள். சில குடும்பங்களில் முதியோருக்கிருக்கும் சில வியாதிகள், நோய்கள் தமது பிள்ளைகளுக்கும் தொற்றிவிடும் என்பதனால் பிள்ளைகளை அவர்களுடன் சேரவிடமாட்டார்கள். ஏதாவது கேட்டால் பிறகு வாங்கித் தருகிறேன், சம்பளத்தில் வாங்கித் தருகிறேன் எனக் கூறிப் பலர் தட்டிக் கழித்து விடுவார்கள். இதனால் ஏமாற்றமும் விரக்தியும் அதிகரித்துக் கொண்டே செல்லும். ஒரு சிலர் திறன்பேசியிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் அமிழ்ந்து சரணாகதி ஆகிவிடுவார்கள். சிலரைத் தொலைக்காட்சி பார்ப்பதற்குக் கூட அனுமதிக்கமாட்டார்கள். கைப்பேசியும் சிலரிடம இருக்காது. தமது வாழ்வில் இருள் சூழ்ந்துவிட்டதாகக் கருதுவார்கள். சில இடங்களில் சத்துள்ள உணவுகள், மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொடுக்காது வெளியில் காட்டாப்புக் காட்டிக் கொண்டு பகட்டுடன் உலாவுவார்கள். அதனால் சிலர் படுத்த படுக்கையாக்கி விடுவார்கள்.

முதுமைப் பருவத்தில் பலருக்கு 'ஐயுந் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து, மெய்யும் பொய்யாசி விடுகின்ற.' (பட்டிணத்தார்) நிலை ஏற்படும். உடம்பு தளர்ந்துவிடும். வாய் தளுதளுத்து நாக்குப் புரளும். கண் பார்வை இழந்து போகும். காது கேட்கும் திறன் குறைந்து கொண்டு செல்லும். மூக்கின் உணர்திறனும் சுவாசமும் பாதிப்படையும், இந்த உடம்பு பொய்யானது என எணணத் தோன்றும். 'இறைவன் ஏன் இன்னும் என்னை அழுந்த வைத்துக் கொண்டிருக்கிறான். நான் வாழ்ந்துதான் என்ன பயன்' என்றெல்லாம் எண்ணத் தோன்றும். இன்னும் சிலர் 'அழுந்தாமல், கஷ்டப்படாமல், படுத்த படுக்கையாகிவிடாமல் நடமாடிக் கொண்டிருக்கும் போதே தனது உயிர் பிரிந்துவிட வேண்டும்' என இறைவனிடம் பிரார்த்திப்பார்கள். பலர் 'எது நடந்தாலும் நடக்கட்டும்' எனத் தன்பாட்டில் செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். 'ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்' என்பதற்கிணங்க 'வருடம் கடந்து போகப் போக முதுமை நம்மைத் தேடிவரும்' என்ற உலக நியதிக்கிணங்க இவ்வுலகில் பிறந்தவருக்கு நோய் நொடிகள், முதுமை, இறப்பு யாவும் நிச்சயமானது என்பதை உணர்ந்து வாழ்க்கையைச் சந்தோசமாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.



ஒவ்வொருவருக்கும் முதுமை என்பது முக்கியமானது என்பதனால் அந்த நிலையை அடைவதற்கு முன்பாகவே பல திட்டமிடல்களைச் செய்து வைக்க வேண்டும். பிற்காலத்தில் யாராவது முன்வந்து உதவுவார்கள் என்பதெல்லாம் மறந்து சொந்தக் காலில் நின்று நமக்குரிய வாழ்க்கையை நாம் வாழ்வதற்குப் பல திட்டமிடல்களைச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். யாரையும் நம்பி இருப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நமக்கு நாமே துணை என்பதை மனதில் இருத்திச் செயற்பட வேண்டும். நமது செலவுக்காகக் கொஞ்சமாவது சேமித்து வைக்க வேண்டும் முதுமைக் காலத்தில் நமது கையில் பணம் இருந்தால்தான் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். இதில் சிலருக்கு விதிவிலக்குகளும் காணப்படுகின்றன. உறவினரோடு உறவாடுவதற்கு நமது கையில் கைப்பேசி ஒன்றிருத்தல் வேண்டும். ஒரு சிறிய வானொலி, தொலைக்காட்சியும் வைத்திருத்தல் நல்லது. யாரையும் நம்பி இருக்காமல் நமக்கு அடிக்கடி தேவைப்படும் பொருட்களை (மருந்து, சவக்காரம், பற்பநச, பற்தூரிகை, முகச்சவர உபகரணம்) நாமே வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் பல குடும்பங்களில் இவற்றினால்தான பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. அதனால் மன முறிவுகளும் ஏற்படுவதைப் பலரிடம் இருந்து அறிய முடிகிறது.

முடிந்தவரை நமது வேலைகளை (எழும்பி நடமாட முடியுமானபோது) நாமே செய்து கொள்ள வேண்டும். அவர்கள் செய்து தருவார்கள் என எதிர்பார்த்தீருப்பது பல வேதனைகளையும் வலிகளையும் ஏற்படுத்திவடலாம். நாம் பாவிக்கின்ற உடுப்புகள், மலசலகூடம் ஆகியவற்றை நாமே கழுபிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். முடிந்தவரை தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும். கட்டளையிடுதல், பணித்தல், அறிவுரை, ஆலோசனை கூறல், நீண்ட நேரம் அளவளாவுதல், பிடிவாதம் செய்தல், முன்பு போல் யாரையும் கட்டுப்படுத்தாதிருத்தல், மற்றவரைப் பற்றி அலட்டிக் கொள்ளதிருத்தல், கிடைத்தால் உண்பது இல்லையெனில் கிடைக்கும்வரை பொறுமையோடு இருத்தல், அன்பு கிடைக்கவில்லை, அது இது வாங்கித்தரவில்லை எனக் கவலை கொள்ளாதிருத்தல் ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றிறனால் கவலையின்றிச் சந்தோசமாக வாழலாம்.

வீட்டிலுள்ள முதியவர்களைப் பராமரித்தல் தொடர்பான பல பிரச்சினைகள் நடுத்தர, உயர் வர்க்கத்தினரிடமே அதிகம் காணப்படுகின்றன. அவர்களே முதுமைக் காலத்தில் அவதானமாக இருத்தல் வேண்டும். நமது வாழ்க்கை நம் கையில்தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு உள்ளதை வைத்துச் சந்தோசமாக வாழப் பழகிக் கொண்டால் இருக்கும்வரை முடிந்தவரை சந்தோசமாக வாழலாம். பலவீனங்களுக்கும் கவலைகளுக்கும் வேதனைகளுக்கும் இடம் கொடுத்தால் சந்தோசமாக வாழமுடியாது. நமக்கு அன்பு, மரியாதை கிடைக்காவிட்டாலும் வாழும்வரை அன்பு செலுத்தி, மரியாதை கொடுத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். கவலைகளும் வலிகளும் வேதனையைத் தரலாம். மனமுறிவைக்கூட ஏற்படுத்தலாம். ஆகையினால் தேற்றிக் கொண்டு, சமாளித்து வாழ்வதே சிறந்தது.

'வாழ்க்கை போர்க்களத்தில் வெற்றி வாகை சூடுவதற்குத் தேவையானது துணை அல்ல துணிச்சல். துணிச்சலும் முயற்சியும் இருந்தால் எந்தச் சோதனையையும் வென்றிடலாம் வாழ்வில்'. முதுமையடைந்துவிட்டேன். நோயும் வியாதியும் வந்து சேர்ந்துவிட்டது. முடியாமல் இருக்கிறது எனச் சோர்ந்திருந்தால் எதனையும் சாதிக்க முடியாது. வாழ்க்கை பெறுமதியானது. சாதிப்பதற்கு வயது ஒரு பொருட்டல்ல. துணிச்சல் இருந்தால் போதும் மடியும்வரை சாதிக்கலாம். ஓய்வு நேரத்தைத் திட்டமிட்டு முறையாகப் பயன்படுத்துங்கள். பத்திரிகை வாசிக்கலாம். நல்ல நூல்களை படிக்கலாம். கவிதை, கட்டுரை, சிறுகதை எழுதலாம். உற்பத்தி, வியாபார முயற்சிகளில் ஈடுபடலாம். சமூகப் பணியில் ஈடுபடலாம். இதில் ஏதாவது ஒன்றைக் கைக்கொண்டு ஓய்வு நேரத்தைப் பயனுடையதாகக் கழிக்கலாம். வாழும்வரை எதையாவது சாதித்துக் காட்ட வேண்டும். தனிமையில் சோந்து போய் ஏக்கத்தோடு இருப்பது பலவீனமாகும். பலவீனத்தை உடைத்தெறிய வேண்டும். ஏக்கம், பெருமூச்சு, கவலை. முயவாமை எல்லாமே வெற்றிக்கான தடைக்கற்கள். பலவீனத்தின் அடையாளம். நமது பலவீனத்தை இன்னொருவர் பயன்படுத்தி வெற்றியடைந்து விடுவார். வெற்றியோ தோல்வியோ எதுவாகினும் களத்தில் இறங்க வேண்டும்.

வயதையும் முதுமையையும் காட்டித் தட்டிக் கழப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். பயத்தைத் துரத்தியடித்து வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இறக்கும்போது கவலைகள் வேதனைகளோடு மடிந்து போகாமல் சாதித்திருக்கிறேன் என்ற மனநிறைவோடு உயிர் பிரிய வேண்டும். 'பிறர் நம்மைத் தூக்கி எறியும் சந்தர்ப்பங்களிலேயே உனது அடையாளத்தை நிரூபிக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது' அந்த வாயப்பைச் சரியாக, நிதானமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கையைச் சந்தோசமாக, மகிழ்ச்சியோடு வாழ்வது நம் கையிலேயே இருக்கிறது. 'வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்'

*தோல்வியடைந்த சந்தர்ப்பங்களில் எல்லாம்
தோல்வியே வெற்றிக்கான படிக் கற்களாகிவிடும்*

**படிக்கற்கள் தொடரும்.....**



# சமூக நல்லிணக்கத்திற்கான திறவுகோலில் மொழியால் இணைந்த கற்கை நெறியின் பயணம்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கிணங்க அனைத்து ஊரும், அனைத்து மக்களும் நமது மக்களே என்ற எண்ணத்தை நாம் அனைவரும் கொண்டிருக்க வேண்டும். அதுபோலவே ஒரு நாட்டின் வளர்ச்சி அங்கு வாழும் நாட்டு மக்களிடத்திலே உள்ளது. அதுவே சமூக நல்லிணக்கம் ஆகும். பல்லின சமூகத்தில் வாழுகின்ற ஒரு மனிதன் சமூகத்தோடு முரண்பாடுகள் இன்றி இணக்கப்பாட்டுடன் ஒற்றுமையாக வாழப் பழகிக் கொள்ளும் ஒரு நிலையே சமூக நல்லிணக்கம் ஆகும். சர்வதேச மட்டத்திலும், நாடளாவிய ரீதியிலும் பேசப்படும் ஒரு பேசும் பதம் 'சமூக நல்லிணக்கமே'! இலங்கை நாட்டின் சமுதாயத்தை முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்வதற்கு பேரிடராக இருப்பது இன, மத, மொழி, சமய ரீதியாக ஒவ்வொரு சமூகமும் தம்மை பிளவுபடுத்திக் கொண்டு வாழ்ந்து வருகின்றமையேயாகும். இவ்வாறான ஒரு நிலைமையில் சமூக நல்லிணக்கத்தை பற்றிய அறிவை சமூகத்தின் மத்தியில் பரப்பும் அடிப்படையில் அரசும், பல அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், சிவில் அமைப்புகள் என பல்வேறுபட்ட அமைப்புகளும் பாடுபட்டு, முயற்சித்து வருகின்றன.

அந்த வகையில், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எழுத்தாணி கலைப் பேரவையானது தமிழ் மொழி பேசும் ஊடகவியலாளர்களுக்கு சிங்கள மொழியையும், சிங்கள மொழி பேசும் ஊடகவியலாளர்களுக்கு தமிழ் மொழியில் அமைந்த ஒரு கற்கை நெறியினை முன்னெடுத்து வருகின்றது. கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் எழுத்தாணி கலைப் பேரவையானது கலை, இலக்கிய, சமூக சார் செயற்பாடுகளை மிகவும் காத்திரமான முறையில் முன்னெடுத்து செயற்பட்டு வருகின்றமை இவ்விடத்தில் பதிவு செய்யக்கூடிய விடயமாகும். இவ்வாறான முன்மாதிரியான செயற்பாடு கொண்ட எழுத்தாணி கலைப் பேரவை மூலமாக முன்னெடுத்து வரும் இக் கற்கை நெறியை முற்றிலும் இலவசமாகவே எமக்களித்துள்ளது. இக் கற்கை நெறிக்கு பலரும் விண்ணப்பித்து இருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களைக் கொண்டே இவ் கற்கை நெறியினை நடாத்தி வருகின்றது. இக் கற்கை நெறியானது ஆரம்பகட்ட வகுப்புகளில் தமிழ் மொழி பேசும் ஊடகவியலாளர்களுக்கும், சகோதர மொழி பேசும் ஊடகவியலாள்களுக்கும் தனித்தனி வகுப்புகளாக நடைபெற்றாலும், இரண்டாம் கட்டத்தில் பயிற்சியின் மூலமாக நாம் இணைக்கப்பட்டோம். ஆரம்பகட்ட வகுப்புகளில் எமக்கு தெரிந்த சிங்கள மொழியின் அடிப்படையைக் கொண்டே நகர்ந்து சென்றோம். அதிலும் ஒரு சிலர் சிங்கள மொழியை எழுத மட்டுமே தெரியும் கதைக்கத் தெரியாது. வேறு சிலர் கதைக்க மட்டுமே தெரியும் எழுதத் தெரியாது. மற்றைய சிலர் கதைப்பதிலும் எழுதுவதிலும் ஓரளவு தெரிந்தவர்களும், ஓரளவு குறைவாக தெரிந்த நிலையிலுமே இருந்தோம். ஆயினும் நமக்கான நிலையினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் விதமாக வளவாளர்களாக வந்தவர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட அறிவு ஆற்றல் மிகச் சரியான முறையில் விளங்கிக் கொண்டு கதை சொல்லல், ஆடல், பாடல்கள் என சுவாரஸ்யமான முறையில் கற்கை நெறியினை கொண்டு சென்றமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இதன் வாயிலாக பயத்திலும், ஒருவித கூச்சத்திலும் இருந்த நாம் அதன்பின் எம்மை பலப்படுத்தி வகுப்புகளில் எமக்கான ஒளியை வீசத் தொடங்கினோம். எம் கற்கை நெறியானது வெறுமனே வாய்மொழியிலும், எழுத்து மொழியிலும் ஆன பயிற்சியுடன் மட்டும் தொடரவில்லை. அதன் இரண்டாவது கட்டத்தில் தமிழ், சிங்கள மொழி பேசும் ஊடகவியலாளர்கள் இணைந்த ஒரு பயிற்சியாகவே அடுத்தகட்ட பாதைக்கு நகர்த்தப்பட்டது. அதில் முதல் அம்சமாக தமிழ்,சிங்கள மொழி பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்த சமூக ஒன்று கூடலுக்கான களத்தில் இல்லத்தை நோக்கிய ஒரு பயணம். அதாவது தமிழ், சிங்கள மொழி பேசுபவர்களின் பண்பாட்டையும், கலாசாரத்தையும், வாழ்க்கை கோலங்களையும் அறியும் வண்ணம் ஏற்படுத்தப்பட்ட பயணமாகும். இதில் தமிழ் மொழி பேசும் ஊடகவியலாளர் ஒருவர் சிங்கள மொழி பேசும் ஊடகவியலாளரின் இல்லத்திற்கும், சிங்கள மொழி பேசும் ஊடகவியலாளர் தமிழ் மொழி பேசும் ஊடகவியலாளரின் இல்லத்திற்குமான பயணமாகும். எழுத்தாணி கலை பேரவையின் ஒழுங்கமைப்பில், அவர்களால் வழங்கப்பட்ட பரிசுப் பொதிகளுடன், அவரவருக்கான குறித்த நபரின் இல்லத்துக்கு சென்றிருந்தோம். அவ்வாறாக சகோதர மொழி பேசும் ஒரு சகோதரியின் இல்லத்திற்கு நான் சென்றிருந்த போது, அவர்களின் குடும்பத்தினர் இன்முகத்துடன் வரவேற்றனர். அச் சகோதரி மூலமாக அவர்களின் வாழ்க்கைக் கோல முறையை அறிந்தது மட்டுமல்லாமல் அவர்களின் உணவு பழக்க வழக்கங்களையும், விருந்தோம்பலையும் கண்டு பூரிப்படைந்திருந்தேன். அவருடைய குடும்பத்தாருடன் ஓரளவுக்கு எனக்கு தெரிந்த அளவில் கதைத்த போது அவர்கள் எவ்வித வேறுபாடும் இன்றி என்னிடம் சகஜமான, தோழமையுடன் அலவலாடினர். அத்துடன் அவர்களின் பண்பாட்டு, கலாசார விடயங்களையும், வழிபாட்டு முறைகளையும் நான் அறிந்து கொண்டேன். இல்லத்தை நோக்கிய பயணத்தின் மூலமாக நான் சகோதர மொழி பேசும் மக்களின் பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை கோலங்களை அறிந்தது மட்டுமல்லாமல் அவர்களுக்கு இடையிலான ஒரு புரிந்துணர்வை பெற்றுக்கொண்டதோடு அதன் மூலமாக சமத்துவ மனப்பாங்கை நம்மிடத்தில் வளர்த்துக் கொள்ள பேருதவியாக இருந்தமையோடு இனம், மதம், மொழி என்பவற்றைக் கடந்து நாம் எல்லோரும் 'இலங்கை நாட்டு மக்களே' என்ற ஒரு திட சங்கற்பத்தை மேற்கொள்வதற்கு வழிவகுத்த பயணமாகவே இதனை நான் கருதுகின்றேன்.





இவ்வாறாக கடந்து சென்ற எமது கற்கை நெறியின் அடுத்த கட்டமாக எம் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கண்டி மாவட்டத்தை நோக்கிய வெளிக்கள சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தோம். அதிகாலையில் ஆதவன் தன் பொற்கரங்களை பரப்பும் வேளையில், உந்துருளியில் எமது பயணத்தை ஆரம்பித்தோம். போகும் வழியில் இதமான தென்றல் வீச நாம் எல்லோரும் தமிழ், சிங்களப் பாடல்களைக் கேட்டுக் கொண்டு, நடனமாடி ஒருவருக்கு ஒருவர் சந்தோஷமாக 'ஒரு தாய் பிள்ளைகள்' போல, எழுத்தாணி அமைப்பு குழுவினருடன் சென்று கண்டியை அடைந்தோம். அதில் ஒரு சிறப்பான அம்சமாக மலையகத்தைச் சேர்ந்த அர்ப்பணிப்பு மிக்க ஊடகவியலாளர்களை சந்திக்கும் ஒரு வாய்ப்பை எமது எழுத்தாணி கலை அமைப்பு ஒழுங்குப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும் இதன் மூலமாக அவர்களை சந்தித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களின் அனுபவப் பதிவுகளையும், அவர்கள் கடந்து வந்த பாதையில் மொழியிலான தாக்கத்தையும் பகிர்ந்து கொண்டிருந்தனர். இத்தருணத்தில் எமது ஆற்றுகை திறன்களையும் அரங்கேற்றினோம். தொடர்ந்து அவர்களை கௌரவிக்கும் வகையில் நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டது. இவ்வாறாக அவர்களிடம் இருந்து விடைபெற்றுச் சென்று மாத்தளையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனையும் தரிசிப்பதற்கான சந்தர்ப்பம் எமக்கு கிடைத்திருந்தது. சகோதர மொழி பேசும் என் சக தோழமையுடன் இணைந்த இவ் வெளிக்கள சுற்றுப்பயணத்தில் இன நல்லிணக்கத்திற்கான பாதையாக நகர்த்திச் சென்றோம். பயணமும் இனிதே நிறைவு பெற்றது.

தமிழ், சிங்கள மொழிகளின் ஊடுறுவல் ஒவ்வொரு இடத்திலும் எவ்வாறான தாக்கத்தை செலுத்துகின்றது என்பதோடு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமின்மையையும் மலையகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன். இதன் மூலம் தமிழ் மொழியினதும், சிங்கள மொழியினதும் அவசியத்தை கற்றுக் கொள்ள முடிந்தது. இவ்வாறாக இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ள எமது கற்கை நெறியின் மூலமாக நாம் சகோதர மொழி பேசும் ஊடகவியலாளர்களிடம் ஒன்றிணைந்ததோடு பரஸ்பர ஒற்றுமையையும், சமூக நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் வளர்த்துக் கொள்வதற்கான களத்தை அமைத்து தந்த பெருமை எழுத்தாணி கலைப் பேரவைக்கே!

சமூக நல்லிணக்கம் சார்ந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்வதில் பல நிறுவனங்கள் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் இக்காலகட்டத்தில் இவ்வாறானதொரு கற்கை நெறி மூலமாக அதனை முன்னெடுத்துச் சென்ற எழுத்தாணி கலைப் பேரவைக்கும், விரித்தி அமைப்புக்கும் இவ்விடத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

சமூக நல்லிணக்கத்திற்கான திறவுகோலில் மொழியால் இணைந்த எம் கற்கை நெறியின்சமூக நல்லிணக்கத்திற்கான திறவுகோலில் மொழியால் இணைந்த எம் கற்கை நெறியின் பயணத்தின் மூலமாக இலங்கை நாட்டில் தமிழ், சிங்கள இரு மொழிகளையும் சமநோக்கில் கற்றுத் தேர்ச்சியடைந்தால், நாட்டின் மொழி முரண்பாட்டை நீக்க முடியும். இதன் மூலமாக சமத்துவமிக்க சமூகத்தை உருவாக்குவதோடு ஒற்றுமையை வலுபெறச் செய்து சுபீட்சமான, ஆரோக்கியம் நிறைந்த எதிர்காலத்துடன் கூடியதொரு சமூகத்தை அடையலாம் என்பது எனது அனுபவத்தின் வாயிலாக கண்ட உண்மையான விடயமாகும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' நன்றி!

தொகுப்பு :-
புவனேந்திரன் திவாகரன்
திருக்கோணமலை.



# ரோட்டரி கழகத்தின் 2 வது தலைவராக தேசபந்து செல்வராசா பதவிப் பிரமாணம்!!



















மட்டக்களப்பு நகர் ரோட்டரி கழகத்தின் 2023 - 2024 ஆண்டிற்கான தலைவர் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வு வியாழக்கிழமை (07) மட்டக்களப்பில் விமர்சையாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஈஸ்ட் லகூண் ரோயல் மண்டபத்தில் இடம்பெற்ற

பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க கலந்து சிறப்பித்துள்ளார்.

ரோட்டரி கழகத்தின் உறுப்பினர்களினால் அதிதிகள் மற்றும் புதிய தலைவர் உள்ளிட்டோர் மலர் மாலை அணிவித்து மங்கள வாத்தியம் முழங்க அழைத்து வரப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. அதனை தொடர்ந்து புதிய தலைவரையும் அவரது குடும்பத்தினரையும் மேளதாள வாத்தியம் முழங்க வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து 2023 - 2024 ஆண்டிற்கான புதிய தலைவராக தொழிலதிபர் தேசபந்து எம்.செல்வராசா பதவிப் பிரமாணம் மேற்கொண்டு தமது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன், கிழக்குப் பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கெனடி, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், புதிய தலைவரின் பாரியார் திருமதி சுகிர்தா செல்வராஜா, உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள், கழகத்தின் முன்னால் தலைவர் வைத்தியகலாநிதி ஸ்ரீநாத், கழகத்தின் செயலாளரும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரதி உப வேந்தருமான கே.கருணாகரன், கழகத்தின் உறுப்பினர்கள், லயன்ஸ் கழக பிரதிநிதிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். தொழிலதிபர் தேசபந்து எம்.செல்வராசா அவர்கள் மட்டக்களப்பு நகர் ரோட்டரி கழகத்தின் 2 வது தலைவராக கடமையினை பொறுப்பேற்றதன் நினைவாக வறிய மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கான உதவிகள் இதன்போது 2 பாடசாலைகளுக்கு வழங்கிவைக்கப்பட்டதுடன், பிரதம அதிதியை கௌரவிக்கும் முகமாக புதிய தலைவரினால் நினைவுப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதம அதிதி, சிறப்பு அதிதிகள் மற்றும் புதிய தலைவர் உரை என்பவற்றினை தொடர்ந்து, சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் புதிய தலைவருக்கு மலர்மாலைகள் அணிவித்து, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து நிகழ்வு நிறைவடைந்தது.

புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள தொழிலதிபர் தேசபந்து எம்.செல்வராசா மட்டக்களப்பில் நீண்டகாலமாக சமூக ஆர்வலராக செயற்பட்டு பல ஏழை குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வண்ணமான மனிதாபிமான செயற்பாடுகளை மேற்கொண்டுவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 28

# மூத்த பல்துறை எழுத்தாளர் கலாபூஷணம் ஆதம்பாவா அசனார் (ஆ.மீராசாகிபு) கலைஞரின் சாதனை கலைப் பயணம்

சமூக வளர்ச்சி காலகட்டங்கள் அனைத்தின் ஊடாகவும் கலை இலக்கியம் வளர்ச்சி பெற்று வந்திருப்பதை வரலாற்றினூடாக காண முடிகின்றது. ஆரம்பகால மனிதர்களிடையே பிற்காலங்களில் வளர்ச்சி பெற்ற கலைகளைக் காணலாம் வேறு மனிதக் குழுக்கள் இடையே பல அம்சங்கள் கொண்ட ஆரம்ப கலைக்கூறுகள் உருவாகி வளர்ந்து தற்போது காலக் கண்ணாடியாக திகழ்கிறது. இவ்வாறான பழமை மிக்கதும், பெருமை வாய்ந்ததுமான இக்கலையில் பல்வேறுபட்ட துறைகளில் பல திறமை வாய்ந்த பல கலைஞர்கள் உருவாகி வருகின்றனர்.

அவ் வகையில், திருக்கோணமலை மாவட்டத்தில் 10ஆம் குறிச்சி எனும் இடத்தினை பிறப்பிடமாகக் கொண்டு ஆதம்பாவா றகுமத்தும்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த இவரது இயற்பெயர் ஆ.மீராசாகிபு. புனைபெயர் ஆ.அசனார். இவர் தனது பாடசாலைக் கல்வியை தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கற்றவர்.

பாடசாலை காலத்தில் ஏற்பட்ட ஆர்வத்தின் நிமித்தம் இலக்கியத் துறைக்குள் பிரவேசித்தார். 1960 பகுதிகளில் வீரகேசரி பத்திரிகையின் 'மக்களின் கடிதம்' எனும் பகுதியில் திருக்கோணமலை மாவட்டத்தின் மக்களின் பிரச்சினைகளையும், சமூகத் தேவைப்பாடுகளையும் வெளிப்படுத்தும் முகமாக கருத்துரைகளை இப்பகுதியின் வாயிலாக துணிச்சலாக வெளிக்கொண்டு வந்தார். அதன் தொடர்ச்சியாக வீரகேசரி, தினக்குரல், தினகரன், சுடர்ஒளி, தினபதி, தினமுரசு, சிந்தாமணி, சுதந்திரன் போன்ற பத்திரிகைகளில் கவிதைகள், கட்டுரைகள், நாடக விமர்சனங்கள், சினிமா விமர்சனங்கள் எனப் பல்வேறு துறை சார்ந்த வடிவங்களை 'திருகோணமலை அசனார்', 'இந்திரா மணாளன்', 'சி.பி. மணிவண்ணன்', 'சிவாஜிப்பித்தன்' ஆகிய புனைபெயர்களைக் கொண்டு எழுத்துருவில் படைத்து எழுத்துலகில் தனக்கென்றதோர் அடையாளத்தை நிரூபித்து சமூகத்தின் மத்தியில் அங்கீகாரத்தைப் பெற்றார்.

ஆரம்ப காலங்களில் திருக்கோணமலையில் இடம் பெறும் கலை, இலக்கிய நிகழ்வுகளிலும், நூல் வெளியீட்டு நிகழ்வுகளிலும், குறிப்பாக 'நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின்' பௌர்ணமி தின நிகழ்வுகளிலும் பெருமளவில் கலந்து சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவை தவிர ஆரம்ப காலங்களில் இயங்கி வந்த திருக்கோணமலை தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் குறிப்பிட்ட ஆண்டுகள் தலைவராகவும், செயலாளராகவும், திருக்கோணமலை முற்போக்கு கலா மன்றத்தில் குறிப்பிட்ட ஆண்டுகள் பொருளாளராகவும் பதவி வகித்து சிறப்பாக செயலாற்றி வந்தவர். இவர் எழுத்துத் துறையில் மட்டுமின்றி நாடகத் துறையிலும் விற்பன்னராக திகழ்ந்தவர். புகழ்பெற்ற நாடகக் கலைஞரான சீ.வில்வராஜ் அவர்களின் நடிப்பிலும், கதை, வசனம், இயக்கத்தில் உருவான 'புது வாத்தியார் பட்ட பாடு' என்ற நகைச்சுவை நாடகத்தில் நமது கலைஞரும் ஒரு நடிகராக மேடையேறி தன் நடிப்புத் திறமையால் முழு அரங்கையும் கவரச் செய்தவர். தொடர்ந்து நாடக வரலாற்றில் தடம் பதித்த பெரும் கலைஞர்களோடு இணைந்து பல்வேறுபட்ட நாடகங்களில் நடித்ததோடு மட்டுமல்லாமல் நாடகத் துறை சார் விமர்சனங்களையும் பத்திரிகையில் எழுதி வந்தவர். அவற்றில் அடங்காப்பிடாரி (நகைச்சுவை நாடகம்), ஒளிமலர் (சமூக நாடகம்), இரத்தச் சிம்மாசனம், இருளும் ஒளியும் (சமூக நாடகம்), இழந்த காதல், துப்பறியும் நாடகம், புது வாழ்வு என மேடையேறிய பல வகை நாடகங்கள் குறித்த விமர்சனங்களை பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வந்தவர். இவ்வாறு எழுத்தாளராக, நாடக நடிகராக, கவிஞராக, விமர்சகராக, அறிவிப்பாளராக, மேடைப் பேச்சாளராக பல் துறையிலும் தடம் பதித்த இவர் திருக்கோணமலை மாவட்ட சமாதான நீதவானாக இன்றும் சேவையாற்றி வருகின்றார். திருக்கோணமலை மாவட்டத்தில் பல் துறைகளிலும் தன்னை நிலைநாட்டி அறுபது வருடங்களுக்கு மேலாக காத்திரமான பணிகளை சமூகத்துக்கு சலிக்காது ஆற்றி வந்த மூத்த பல்துறை எழுத்தாளர் கலா பூஷணம் ஆ.அசனார் கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலைப் பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.





தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

**? உங்களது எழுத்துத்துறை நாட்டம் குறித்து கூறுவீர்களா?**

பாடசாலைக் கல்வி கற்கும் காலத்திலேயே எழுதுவதிலும், பேசுவதிலும் ஆர்வம் கொண்டேன். ஆரம்பத்தில் சிறுவர் இலக்கிய சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் சிறுகதைகளை எழுதி வந்தேன். வீரகேசரி நாளிதழில் 1963ஆம் ஆண்டு தொடக்கம் என்னால் எழுதப்பட்ட நாடக விமர்சனக் கட்டுரைகள் தொடர்ந்து பிரசுரமாகின. சில துறைசார் விடயங்கள் சி.பி. மணிவண்ணன், இந்திராமணாளன், சிவாஜிப்பித்தன் ஆகிய புனை பெயர்களில் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. 'திருகோணமலை குரல்' என்ற பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமை ஆற்றியுள்ளேன். தமிழ் முரசு மூன்றாவது ஆண்டு மலரில் 'உயிர் கலக்க விரும்புகிறேன்' என்ற எனது கவிதை முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாகியது. தொடர்ச்சியாக பல கலைப் பணிகளிலும் ஈடுபட்டு தற்போது 80 வயதைக் கடந்த நிலையிலும் கலைத் துறையின் மீதுள்ள தாகத்தை தணித்துக் கொள்ள முடியாத சூழ்நிலைக்குள் உள்வாங்கப்பட்டு விட்டேன்.

**? எழுத்துத் துறையில் நீங்கள் பத்திரிகையில் எழுதி பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் குறித்து கூறுவீர்களா?**

ஏராளமான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடக விமர்சனங்கள், சினிமா விமர்சனங்கள் என்று பல்துறை சார் வடிவங்களில் எனது எழுத்துப் படைப்புகளை எழுதி வந்தேன். அவற்றில் குறிப்பிட்டு கூறினால் நான் எழுதிய கவிதைகளில் 1963இல் பத்திரிகையில் வெளியான 'உயிர் கலக்க விரும்புகிறேன்', 1964இல் 'என் கனவு', 'ஈடில்லாப் புரட்சி காண்போம்', 1968இல் 'சோதரர் ஒருமை கண்டார்' போன்றவைகளும் நாடக விமர்சனங்களில் அக்காலங்களில் மேடையேறிய 'அடங்காப்பிடாரி', 'ஒளி மலர்', 'இருளும் ஒளியும்', 'இரத்தச் சிம்மாசனம்', 'புது வாழ்வு', 'அமளிகள்', 'துப்பறியும் நாடகம்', 'இறுதி மூச்சு', 'சத்திய முத்திரை' போன்ற மேடை நாடகங்கள் குறித்த விமர்சனங்களை எழுதியதுடன் அக்காலத்து சினிமா உலகம் குறித்த கண்ணோட்டங்களை தினபதி பத்திரிகையின் சினிமாப் பகுதியில் சி.பி.மணிவண்ணன் என்ற புனை பெயரிலும், வீரகேசரி பத்திரிகையின் சினிமாப் பகுதியில் ஆ.சிவாஜிப்பித்தன் என்ற புனை பெயரிலும் விமர்சனங்களாக எழுதி வந்தேன். இவை தவிர சமூகத்தின் முக்கிய பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் வகையிலான செய்தி அறிக்கைகளையும், கருத்துப் பகிர்வுகளையும் அக்காலத்தில் எழுதி வந்தேன்.

**? நீங்கள் முதன் முதலில் நடிகராய் மேடையேறி நடித்த 'புது வாத்தியார் பட்ட பாடு' என்ற நகைச்சுவை நாடகம் குறித்து கூறுவீர்களா?**

1963இல் முதன் முதலில் என்னை ஒரு நடிகராய் மேடையேற வைத்த நாடகமே! என்னை நடிகராய் நடிக்க வைத்து அறிமுகம் செய்த பெருமை மதிப்புக்குரிய புகழ்பூத்த நாடகக் கலைஞரான தா.சீ.வில்வராஜ் அவர்களையே சாரும். இவ் மேடை நாடகத்தில் நான் வல்லிபொரம் என்ற பெயரிலான கதாபாத்திரத்தில் நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தேன். இவ் பாராட்டே ஒரு மேடை நடிகராய் முதன் முதலில் எனக்கு கிடைத்த உற்சாகமான வரவேற்பாக இருந்ததோடு அதன் தொடர்ச்சியாக சரித்திர நாடகமான 'சங்கிலியன்', பழங்கவிஞர் கைலாசம்' எனப் பல மேடை நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது.

**? ஓர் எழுத்தாளன் தனது எழுத்தாக்கப் படைப்பில் கவனத்திற் கொள்ள வேண்டிய உத்திகள் பற்றி கூறுவீர்களா?**

சுயமாக சிந்திப்பதற்கு துணிபவனே ஒரு சிறந்த எழுத்தாளன் என்பது எனது கருத்து. வாசகர்களின் நலன்களையும், தேவைகளையும் நோக்காகக் கொண்டு சலிக்காமல், தெளிவான சிந்தனையுடன், படிப்பவர் விரும்பி வாசிக்கத்தக்க வகையிலான இலகுதமிழ் மொழி நடையில் எழுதுவது மிகச் சிறந்த உத்தியாகும். உங்களை ஒரு எழுத்தாளர் என்று நீங்கள் கருதினால்,




எழுத்து என்பது உங்களுக்கு ஒரு பொழுதுபோக்காக இருக்கக் கூடாது. அது உங்கள் வாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்.

**? திருக்கோணமலை மாவட்டத்தில் இன்றைய இலக்கியத் துறையின் வளர்ச்சி பற்றி கூறுவீர்களா?**

இன்றைய காலகட்டத்தில் திருக்கோணமலையில் இலக்கியத் துறையின் வளர்ச்சியானது பெருமை கொள்ளும் அளவிலேயே உள்ளது. இலக்கியத் துறையில் பலரது அதீத ஆர்வமும், இளம் எழுத்தாளர்களின் புதிய வருகையுமே இதற்கு காரணமாகும். இளம் எழுத்தாளர்கள் தங்களது சிறந்த எழுத்தாக்க படைப்புகள் மூலம் சமூகத்தின் மத்தியில் தங்களுக்கான களத்தினை அமைப்பதற்கு போராடி வருகிறார்கள். அதற்கான ஊடக வாய்ப்புகளும் அதிகரித்து விட்டது. ஆயினும் திருக்கோணமலையின் கலைத்துறையில் துறையில் ஆளுமை மிக்க அடையாளம் கொண்ட மூத்த கலைஞர்களின் பார்வை இன்று சமூகத்தின் மத்தியில் புறக்கணிக்கப்பட்டு வருவது மன வேதனைக்குரிய விடயமே!

**? தற்பொழுது கலைத் துறைப் பணிகளில் ஈடுபட்டு வருகிறீர்களா?**

முன்பு போல் கலைத்துறையில் முழு மூச்சுடன் ஈடுபடுவதற்கான சூழ்நிலை அமையவில்லை. காரணம் வயோதிகம், நோய் நிலைமையுமே! ஆனாலும் என்னை தேடி வருபவர்களுக்கு என்னால் முடிந்த ஆலோசனைகளையும் வழங்குவதோடு திருக்கோணமலை மாவட்ட சமாதான நீதவானாக சமூக சேவைகளையும் மேற்கொண்டு வருகின்றேன். என்னை இயன்றவரை கலை வாழ்க்கைக்கு அர்ப்பணித்துள்ளேன் என்று நினைக்கின்றேன்.



**? இன்றைய சமூகத்தின் மத்தியில் மூத்த பல்துறை எழுத்தாளராக உங்களது மனநிலை குறித்து கூறுவீர்களா?**

ஆரம்பக் காலங்களில் தொடர்ந்து எழுதும் போது இருந்த உற்சாகம் இன்று குறைந்த வண்ணமே உள்ளது. காரணம் முத்திரை குத்தப்பட்ட ஒரு சிலருக்கே பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், கலை, இலக்கிய நிகழ்வுகளில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றமையே ஆகும். திருக்கோணமலை மாவட்டத்தில் மூத்த ஆளுமைகளில் பலரை இன்று சமுதாயம் பெரிதும் கண்டு கொள்வதில்லை. எனக்கு தற்போது 80 வயதாகி விட்டது. வயோதிக காலகட்டத்தில் என்னால் கலைப்பணியை முன்னெடுக்க முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டு விட்டேன். இந் நிலைப்பாட்டிலும் திரும்ப எழுத வேண்டுமென்ற அவா இருந்தாலும் உடல்நிலை அதற்கு ஈடு கொடுக்க விரும்பவில்லை. வயது கடந்த நிலையிலும் சமூகத்தில் ஒரு கலைஞருக்கு கிடைக்கும் என்றுமே மாறாத இடமும், அங்கீகாரமும் ஒரு கலைஞரை எந்நேரமும், எவ் வயதிலும் உற்சாகப்படுத்தும் ஊக்கிகளே!

**? கலைத்துறையில் நீங்கள் பெற்ற விருதுகள், பாராட்டுகள் குறித்து கூறுவீர்களா?**

1968இல் வீரகேசரி நாளிதழ் என்னை இந்துக் கல்லூரி தந்த முஸ்லீம் எழுத்தாளர் என பாராட்டி கௌரவித்தது. நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 2012 ஆம் ஆண்டு கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு பிரதேச சாகித்திய விழாவில் திருக்கோணமலை கலாசார பேரவையினால் பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு கலாபூஷணம் அரச விருது கிடைக்கப் பெற்றது. 201%ஆம் ஆண்டு வித்தகர் விருதும், அதே ஆண்டில் திருக்கோணமலை அரசடி சன சமூக நிலையம் எனது கலை இலக்கியப் பணியை கௌரவித்து விருது வழங்கியது.

**? நிறைவாக, வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

இன்றைய காலகட்டத்தில் பல்துறைகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தங்களை இவ்வுலகிற்கு அடையாளப்படுத்த இளங் கலைஞர்கள் மிகவும் பாடுபட்டு உழைத்து வருகின்றார்கள். கடின உழைப்புடன், முயற்சி செய்து வரும் எந்தவொரு செயலிலும் எம்மால் வெற்றி அடைந்திட முடியும் என்பது உறுதி. ஆகவே, உங்களது திறமைக்கேற்ற துறையைத் தேர்ந்தெடுங்கள். அத்துறையில் உங்களை மென்மேலும் விருத்தி செய்து கொள்ளுங்கள். அதன் மூலம் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை பயன்படுத்தி உங்கள் அடையாளத்தை சமூகத்தின் மத்தியில் வெளிப்படுத்துங்கள். சமூகத்தின் பார்வையில் உங்கள் கலை விரும்பப் பெற்றால் வரவேற்கப்பட்டு உங்களுக்கான சிறந்த களம் அமையப்பெறும். வாழ்த்துக்கள். துணிந்து செல்லுங்கள். அந்த வகையில், எம் போன்ற மூத்த கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

வயது கடந்த வயோதிக நிலையிலும் ஒரு மூத்த ஆளுமை மிக்க கலைஞனை சமுதாயம் கண்டு கொள்ளாவிட்டால் உடலளவில் பலவீனமான நிலையில் உள்ளவர்கள், மனதளவிலும் பலவீனமான நிலைக்கு தள்ளப்பட்டு விடுவர். ஆரம்பத்தில் தன்னால் முடிந்த வரை கலைச் சேவையாற்றி சமுதாயத்தில் தனக்கென்ற அடையாளத்தை பதித்தவர்கள். வயோதிக நிலையிலும் கலைஞர்களே! அவர்கள் கடந்து வந்த பாதையின் அனுபவங்கள் வலுவானவை. அவர்கள் எம் மண்ணில் என்றுமே மரியாதையுடன் போற்றுவதற்கு உரியவர்களே! படைப்பாளிகள் வாழும் போதே கௌரவிக்க வேண்டும் என்பது எனது கருத்து.

நன்றி!

இவ்வாறாக பல்துறைகளிலும் வலம் வந்து திருக்கோணமலை மாவட்டத்திற்கு அழியாப் புகழினைப் பெற்றுத் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டு கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**தொடரும்.......**
**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**

# வன்னியாச்சி படைத்த தாமரைச்செல்வி : ஈழப் போர் இலக்கிய பெண் ஆளுமை!

**(அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் 2023 வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழா சிட்னியில் செப்டெம்பர் 10 ஆம் திகதி 2023 நடைபெறுகிறது. இவ்விழாவில் இலக்கியப் படைப்பாளி தாமரைச் செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பை பாராட்டி கௌரவிக்கப் படுகின்றார். இதனையோட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது)**

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

யுத்தகால வன்னியின் வரிகளை யதார்த்த பூர்வமாக எழுத்துருவில் வடித்த தாமரைச்செல்வி ஈழத்தின் பெண் எழுத்தாளர்களுள் முதன்மையான ஒருவர். 19%3 முதல் சிறுகதைகளையும் பல புதினங்களையும் எழுதிவரும் தாமரைச்செல்வி ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார். இவருக்கு இலங்கையின் தேசிய சாகித்திய விருதும் கிடைத்துள்ளது.




### போர் சூழ்ந்த நிலத்தில் மலர்ந்த தாமரை:

போர் சூழ்ந்த நிலமொன்றின் நடுவிலிருந்துகொண்டு, சனங்களின் பாடுகளை யதார்த்தச் சித்தரிப்போடு எழுதத்தொடங்கிய தாமரைச்செல்வி, தான் சார்ந்த மண்ணினதும் மக்களதும் நெருக்கமான படைப்பாளியாக இலக்கியத்தில் அறிமுகமானார் எனக் கூறுகிறார் செம்பியன் செல்வன்.

செம்பியன் செல்வன் ஈழத்தின் முக்கிய எழுத்தாளர்களில் ஒருவரும் 'விவேகி' சஞ்சிகையின் இணையாசிரியர் ஆவார். தாமரைச் செல்வியின் கதைகளில் நெல்லின் வாசனையை, வயல் நிலத்தின் மணத்தை, விவசாயக் குடும்பங்களின் விருப்பங்களை, அவர்களின் தேவைகளை, அவர்களுடைய பிரச்சினைகளை, அந்தக் குடும்பங்களின் சந்தோசங்கள், துக்கங்களை எல்லாம் காணமுடியும் என்கிறார் செம்பியன் செல்வன்.

ஈழத்துப் புனைகதை எழுத்தாளர்களுள் தாமரைச்செல்வியின் பங்கும் பணியும் மிக முக்கியமானவை. 'சுமைகள்', 'விண்ணில் அல்ல விடிவெள்ளி', 'தாகம்', 'வீதியெல்லாம் தோரணங்கள்', 'பச்சை வயல் கனவு' போன்ற கனதிமிக்க நாவல்கள்மூலம் தனக்கென ஓர் அடையாளத்தை இனம்காட்டியிருக்கும் இவர் 'மழைக்கால இரவு', 'அழுவதற்கு நேரமில்லை', 'வன்னியாச்சி' போன்ற சிறுகதைத் தொகுதிகளை ஏலவே அறுவடை செய்து சிறுகதைத் துறையிலும் அதிர்வை ஏற்படுத்தியவர் என புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் குறிப்பிட்டுள்ளார்.

தாமரைச்செல்வி கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனிலுள்ள குமரபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவர். தமது ஆரம்பக்கல்வியை பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும், பின்னர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் தொடர்ந்தார்.

### வன்னி மக்களுக்கு ஒரு வன்னியாச்சி:




தாமரைக்கு ஒரு செல்வி. வன்னி மக்களுக்கு ஒரு வன்னியாச்சி. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் போர்க்கால இடப்பெயர்வு வாழ்வை அழுத்தமாகப் பதிவுசெய்த ஆளுமை. அவருடைய சிறுகதைகள், நாவல்களில் வன்னிமண்ணின் மணம் கமழும். பிரதேச இலக்கியத்தில் வன்னி மண்ணின் மகிமையை எழுதிய படைப்பாளிகளின் வரிசையில் இவருக்கும் தனியிடம் இருக்கிறது எனக் கூறும் எழுத்தாளர் முருகபூபதி, அவரின் படைப்பாற்றலை பின்வருமாறு விபரிக்கின்றார்.

தமிழகத்தில் கரிசல் இலக்கியம் என அழைக்கப்படும் விவசாய மக்களின் ஆத்மாவை பிரதிபலிக்கும் ஏராளமான சிறுகதைகள், நாவல்கள் படித்திருக்கின்றோம். அவற்றுக்கு ஈடான ஈழத்து தமிழ் விவசாய மக்களின் குரலை தமது படைப்புகளில் ஒலிக்கச்செய்தவர்கள், செங்கை ஆழியான், பாலமனோகரன், தாமரைச்செல்வி ஆகியோர். இவர்களுக்குப்பின்னர் தோன்றிய புதிய தலைமுறை வன்னிப்பிரதேச எழுத்தாளர்கள் பலர் அம்மக்களின் வாழ்வை இலக்கியமாக்கி வருகின்றனர். அவர்களுள் தாமரைச்செல்வி ஆளுமைமிக்க பெண் எழுத்தாளர் ஆவார். வன்னிமண்ணின் மணம் கமழும் யதார்த்த இலக்கியத்தை படைத்த தாமரைச் செல்விக்கு பச்சை வயற் கனவுகள் நாவலுக்காக இலங்கை தேசிய சாகித்திய மண்டல விருதுமற்றும் யாழ் இலக்கியப் பேரவையின் விருதும் கிடைத்தது.

ஒரு மழைக்கால இரவு சிறுகதைத் தொகுப்புக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சிறந்த நூல் பரிசும் கிடைத்தது.

விண்ணில் அல்ல விடி வெள்ளி நாவலுக்கு யாழ் இலக்கியப் பேரவையின் பரிசும், வீதியெல்லாம் தோரணங்கள் நாவலுக்கு வடக்கு மாகாண சபையின்




சிறந்த நூல் பரிசையும் பெற்றுக்கொண்டார்.

தாகம் நாவலுக்கு கொழும்பு சுதந்திர இலக்கிய அமைப்பின் விருது மற்றும் யாழ் இலக்கியப் பேரவையின் பரிசும்,

வேள்வித் தீ குறுநாவலுக்கு முரசொலி பத்திரிகையின் முதல் பரிசும் கிடைத்தது. அத்துடன் வீதியெல்லாம் தோரணங்கள் நாவலுக்கு வீரகேசரி - யாழ் இலக்கிய வட்டம் இணைந்து நடத்திய கனக.செந்திநாதன் நினைவுப் போட்டியில் இரண்டாம் பரிசையும், உயிர்வாசம் நாவலுக்கு தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் வழங்கிய சிறந்த நாவல் விருதும் தாமரைச் செல்வி பெற்றுள்ளார்.

தாமரைச்செல்வி தன் மெய்யனுபவங்களையும் பிறர் வாயிலாகக் கேட்டறிந்தவற்றையும் கலாரீதியாகக் கூறி வாசகரிடையே அவற்றினைத் தொற்றவைப்பதோடு தமிழ்ப்புனைகதை இலக்கியத்தில் முகிழ்விடும் நவீனச் செல்நெறிகள் பற்றிய பிரக்ஞைக்கு உட்பட்டு எழுதுவதும் தாமரைச்செல்வியின் வெற்றிக்கான காரணிகள் எனக் கொள்ளலாம். போர்க்காலச் சூழல், போரின் அவலச் சாவுகள். அழிவுகள்.




பதற்றம் நிறைந்த மனங்கள் ஆகியவற்றைத் தனது படைப்புகளில் யதார்த்தமாகச் சித்தரிப்பதில் தாமரைச்செல்வி தனக்கென ஒரு முத்திரை பதித்தவர். சக்தியற்ற பெண்களின் மௌன உணர்வுகளுக்கு வடிவங்கொடுப்பதில் வல்லமையானவர். இச்சிறுகதைத் தொகுதியும் இவரது திறனுக்குச் சாட்சி சொல்வதாகவே அமைந்திருக்கிறது என புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அக்கராயன் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சாதனைப் பெண்மணி விருது 2000 ஆண்டிலும், வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் விருது 2001 ஆண்டிலும், கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் இலக்கியமணி பட்டமும் தங்கப் பதக்கமும் 2002 ஆண்டிலும் பெற்றுள்ளார்.

கொழும்பு கலை இலக்கிய கழகத்தின் விருது 2003 ஆண்டிலும், தமிழ் நாடு சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது 2010 ஆண்டிலும், கண்டாவளைப் பிரதேச சபையின் கலாசாரப் பிரிவின் ஒளிச் சுடர் விருது 2011 ஆண்டிலும், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது 2012 ஆண்டிலும், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தனது வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு இலக்கியப் பணிக்கான கௌரவிப்பு 2015 ஆண்டிலும் தாமரைச் செல்வி பெற்றுள்ளார்.

### கல்விப் பாடத்திட்டத்தில்

அத்துடன் ஈழத்து எழுத்தாளர் தாமரைச்செல்வியின் 'இன்னொரு பக்கம்' என்ற சிறுகதை, இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தரம் 11 'தமிழ்மொழியும் இலக்கியமும்' என்ற பாடநூலில் 2015 ஆம் ஆண்டுமுதல் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கல்வி அமைச்சின் பதினோராம் ஆண்டு பாடத்திட்டத்தில் தாமரைச்செல்வியின் பசி என்ற சிறுகதை இணைக்கப்பட்டிருக்கிறது.

தாமரைச்செல்வியின் பசி என்ற சிறுகதை தமிழ்நாடு இமயவர்மன் என்பவரால் குறும்படமாகத் தயாரிக்கப்பட்டு, இலண்டனில் நடைபெற்ற 'விம்பம்' குறும்பட விழாவில் காட்சிப்படுத்தப்பட்டு பார்வையாளர் விருது பெற்றது.

1996 (இடைவெளி) என்ற சிறுகதை இயக்குனர் மகேந்திரனாலும், பாதணி என்ற சிறுகதை ஜான்.மகேந்திரனாலும் சாம்பல் மேடு என்ற சிறுகதை திரு. திலகனாலும் குறும்படங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாதை வாழ்க்கை ஆகிய தாமரைச்செல்வியின் சிறுகதைகளும் குறும்படங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 'வன்னியாச்சி' படைத்த தாமரைச்செல்வி :

'வன்னியாச்சி' என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள 37 கதைகளையும்

தான் வாழ்ந்த கிளிநொச்சி மண்ணின் அந்தப் பிரதேசத்தின் அடையாளத்தை அந்த மக்களின் துயரங்கள் அதாவது சொந்த ஊரை, உழுது பயிர் செய்த காணியை விட்டு ஒரு முறை அல்ல பல முறை இடம்பெயர்ந்து மக்கள் அலைவதை, வறுமை பசி பட்டினி, கொடுமையான கொலைகள், குண்டு வெடிப்புகள் மக்கள் சிதறிச் சாவது, இப்படியாக இறந்தவர்களை அடையாளம் காண்பது, முதியவர்களின் வலி, குழந்தைகளின் பசி சித்திரவதைகள் என்று தான் வாழ்ந்த பிரதேசத்தின் அதாவது அந்த வன்னி மக்கள் சார்ந்து வலியோடும் கண்ணீரோடும் பின்னிப் பிணைந்துள்ளார் என தாமரைச்செல்வி பற்றி நவஜோதி ஜோகரட்னம் தெரிவித்துள்ளார்.

தாமரைச்செல்வியின் 'வன்னியாச்சி' சிறுகதைத் தொகுதியில் எழுதியுள்ள இந்தக் கதைகள் ஒரு யுத்த காலத்தின்போது வன்னிமக்கள் அனுபவித்த கொடூரங்களை அந்தக் காலகட்டத்தில் மட்டுமல்ல என்றென்றும் உலகிற்கு எடுத்துச் சொல்கின்ற வரலாறாக நிலைத்து நிற்கும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை எனவும் நவஜோதி ஜோகரட்னம் தெரிவித்துள்ளார்.

வன்னி மண்ணின் மணம் கமழும் பெண் ஆளுமையான தாமரைச் செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பை பாராட்டி, அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் 2023 வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழாவில் கௌரவிக்கப்படுகின்றார்.

# அருள் செல்வநாயகம் அவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவு தினம் 03-09-2023

# பன்முக இலக்கிய ஆளுமை அருள் செல்வநாயகம்



ஈழவளநாட்டின் இலக்கியப் பாரம்பரியத்தில் மட்டக்களப்பின் தென்பால் உதிர்த்த முத்துக்களான முதத்மிழ் வித்தக மாமுனி சுவாமி விபுலாநந்த அடிகளார் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை பண்டிதர் வி.சீ.கந்தையா போன்றோர ;வரிசையில் அருள் செல்வநாயகம் அவர்களும் ஓர் இலக்கிய பன்முக ஆளுமையாகும். அமரர் அருள் செல்வநாயகம் அவர்கள ;இறைபதம் அடைந்து இன்றுடன் (2023.09.02) 50 ஆண்டுகள ;பூர்த்தியடைகின்றது. ஈழத்திரு நாடடி;ன் மட்டக்களப்பு மாநகருக்கு தெற்கே குருமண்வெளி என்னும் அழகிய மருதநிலப் பதியில தம்பாப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியினருக்கு மகனாக 1926.06.06 இல் பிறந்தவரே செல்வநாயகம் அவர்கள.; பின்னாளில் இவர் தனது மனைவி அருளம்மா அவர்களின் பெயரை தன் பெயருடன் இணைத்து அருள ;செல்வநாயகம் என எழுத்துலகில் பிரகாசிக்கலானார்.

இலக்கியப்பணி:

தமிழ் ஆசிரியராகொ அதிபராக கடமையாற்றிய அருள ;செல்வநாயகம அவர்கள ;கடடு;ரை சிறுகதை ஆராய்ச்சி நாவல் கிராமிய இலக்கியம் மேடை நாடகமொ; வானொலி நாடகம் கவிதை இசைச்சித்திரமொ; கூத்து சரித்திர ஆய்வு பேச்சாளரொ; வானொலிக் கலைஞன் என பல்பரிமானங்களில் தனது ஆளுமையை பறைசாற்றியுளள்டர.;

ஈழத்தில் மட்டுமல்ல தமிழக வாசகர்களின் மனதிலும் நீங்கா இடம்பிடித்த ஒரு முதன்மை ஈழத்து எழுத்தாளராக மிளிர்ந்தவர் அருள ;செல்வநாயகம். மலேசியா பர்மா போன்ற நாடுகளின் பத்திரிகை வானொலி போன்றவற்றிலும் இவரின் படைப்புக்கள ;கோலோச்சியிருந்தன. எனவே உலகத்தமிழ் இலக்கியப்பரப்பில் தனக்கென தனி முதத்ணீரை பதித்து வாழ்ந்த பேராளனாக இவரைக் காண்கின்றோம்.

ஈழநாடடு; வரலாற்றுக்கதைகள் தாம்பூலராணி போன்ற இவரின் சிறுகதை நூல்கள் மிகவும் பிரசித்தி பெற்றவைகளாகும். இதனைவிட இவரின் 85 மேறப்ட்ட சிறுகதைகள ;இலங்கை இந்திய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் முதன் முதலில் சிறுகதைத் தொகுதி நூலை வெளியீடு செய்த பெருமை இவருக்கே உரியதாகும். பாடசாலைப ; பருவத்தில் இருந்தே இவரது எழுத்தாக்கப்பணி ஆரமப்ணீத்தாலும் இருபதாவது வயதில் முதன் முதலாக இவர் எழுதிய விதியின் கொடுமை எனும் சிறுகதை மின்னொளி சஞ்சிகையில் வெளிவந்தது முதல் இவரின் இலக்கியப் பணி விஸ்வரூபம ;எடுத்ததெனலாம்.

நறுமலர்மாலை ஈழமும் தமிழரும் சீர்பாதகுல வரலாறு என்பன இவரின் ஆராய்ச்சி நூல்கலாகும் பேரறிஞர் அண்ணாவின் ஆடச்ணீயில் 1968ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடடி;ல் இவரால் வாசிக்கப்பட்ட சீர்பாதகுல வரலாறு எனும் ஆய்வுக் கடடு;ரையானது அறிஞர் பெருமக்களால் மிகவும் பாராட்டப்பட்டதுடன் சென்னை சாகித்திய அகடமியின் கலைக்களஞ்சியத்திலும் பிரசுரிக்கப்பட்டது.

மாலதியின் மனோரதம் வாழமுடியாதவன் பாசக்குரல் சூரியகாந்தி வாளமு;னை வாழ்வு மர்மமாளிகை என்பன இவர் எழுதிய நாவல்களாகும். பூசணியாள் சதாரம் பாஞ்சாலி சுயம்வரம் என்பன இவரின் கிராமிய இலக்கிய நூல்களாகும். பணக்காரன் ஏரமு;னை வேலன் என்பன இவர் எழுதிய நாடடு;க ;கூத்துகள். இத்துடன் சுமார ;550 மேற்பட்ட கடடு;ரைகள ;இலங்கை இந்திய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதுடன் பல கவிதைகளையும் எழுதியுளள்டர்.

இவர் உயிர் ஈநத் ஓவியம் எனும் நாடக நூலை எழுதியதுடன் இலங்கை வானொலியில் இவர் எழுதிய 38 நாடகங்கள் ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளன. இதே போன்று அகில இந்திய வானொலியில் 14 நாடகங்களும் மலேசிய வானொலியில் 15 நாடகங்களும் ஒலிபரப்பப்பட்டுள்ளன. இதனைவிட இலங்கை பத்திரிகைகளுக்கு 21 நாடகங்களையும் இந்திய பத்திரிகைகளுக்கு 14 நாடங்களையும் எழுதியுளள்தாகவும் அறியமுடிகின்றது. தமிழகத்திலே கல்கி ஆனந்தவிகடன் கலைக்கதிர் தீபம் கலைமகள் காவேரி மோகினி பேசுமகு;ரல் அமுதசுரபி சுதேசமித்திரன் தினமணிக்கதிர் போன்ற மிகப்பிரபலியமான இருபதுக்கும் மேறப்ட்ட சஞ்சிகைகளில் எழுதியுளள்டர.; இதே போன்று இலங்கையில் வெளிவந்த தினசரிப் பத்திரிகைகளொ; மாதாந்தப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. திருவருட்செல்வம் ரி.டி.எஸ் குரு செல்வம் செல்வா ரி.டி.செல்வநாயகம் குபேரன் வழிகாடடி; எனப ;பல பெயர்களில் இவரது படைப்புகக்ள ;தொடராக வெளிவந்துள்ளன. விபுலாநந்தரியல்:

முதத்மிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பற்றியும் அவரது ஆக்கங்கள் பற்றியும் ஈழத்திலும் தமிழகத்திலும் தேடித் தொகுத்த பத்து நூல்களுடன் சேர்த்து இருபத்தைந்து நூல்களை தனது குறுகிய வாழ்நாளில் வெளியீடு செய்த சாதனைப் பெருமகனாக தன்னை அடையாளம் காட்டிக் கொண்டவர் அருள ;செல்வநாயகம் அவர்கள.;

இதயமும் மூளையும் இணையான வளரச்;சியுற்ற மனிதனே முழுமையான மனிதன் என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும். சுவாமி விபுலாநந்தர் இத்தகைய இரக்க சிந்தையும் நுண்ணறிவும் கொண்டவராக விளங்கினார். அவர் ஆற்றிய மானிடத்தொண்டும் படைத்த இலக்கியங்களும ;இதற்கு சான்று பகர்கின்றன. மூலை முடுக்கெங்கும் முடங்கிக்கிடந்த மகாகவி சுப்பிரமணியப் பாரதியாரின் ஆக்கங்களின் பெறுமதியினை உணர்ந்து சுவாமி விபுலாநந்தர் எவ்வாறு அவற்றினை தேடி எடுத்து அச்சுப் பிரதிகளாகக்ணீ மக்கள ;மத்தியில் கொண்டு சேர்த்தரோ அவ்வாரே சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் மனித குலத்தை நெறிப்படுத்தத் தேவையானது என உணர்ந்த அருள ;செல்வநாயகம் அவர்கள ;தன்னாள ;முடிந்தவரை ஈழத்திலும் தமிழகத்திலும் சுவாமிகளின் ஆக்கங்களை தேடித்தேடி எடுத்து அவற்றை அச்சுப்பிரதிகளாக்கி மனித குலதத்ணீற்கு கையளித்துள்ளார.; இதற்கான அவரது தியாகம் அர்ப்பணிப்பு என்பன அளப்பரியது. எந்தவிதமான பக்கபலமும் இல்லாது தனது சிறிய வருமானத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமாக பல தடவைகள ;பயணித்து தமிழ்நாடடி;ல் உளள் அறிஞர்கள் பதிப்பாளர்கள் எழுத்தாளரக்ள் எனப்பலரைத் தொடர்பு கொண்டு இப்பெரும் கைங்கரியத்தைச் செய்து முடித்துள்ளார்.

இவர் எழுதிய விபுலாநந்த ஆய்வு எனும் நூல் க.பொ.த (சா.த) வகுப்பிற்கு இலக்கிய பாடப் புத்தகமாகவும் விபுலாநந்த இன்பம் எனும் நூல் க.பொ.த (உ.த) வகுப்பிற்கு பாடப் புத்தகமாகவும்

ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் விபுலாநந்த வெளள்ம் எனும் நூல் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பாடநூலாகச் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 1965ம் ஆண்டுக்குப் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு கலை மாணவர்களுக்கு விபுலாநந்த ஆய்வு எனும் நூல் பாடநூலாக ஏற்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அறிஞர்களின் கருத்து:

அருள ;செல்வநாயகம் அவர்கள் சுவாமி விபுலாநந்த அடிகளார் பற்றியும் அவரது ஆக்கங்கள ; பற்றியும் வெளியீடு செய்த ஆறு தொகுப்பு நூல்களை ஒன்றிணைத்து தொகுத்தெழுதிவைத்த

விபுலாநந்த இலக்கியம் எனும் பெரும் நூலை அவரது மனைவி பிள்ளைகள ;சேர்ந்து 2008ம் ஆண்டு வெளியீடு செய்து அமரர் அருள் செல்வநாயகம் அவர்களது கனவை நனவாக்கியுளள்னர். இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள ;நுண்கலைத்துறைத் தலைவரான பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள ;சுவாமி விபுலாநந்த அடிகளார் இறந்ததன்பின்னர் அவரது ஆக்கங்கள ;அனைத்தும் வெளிவர வேண்டும் என்று ஓரிரு அன்பர்கள ;விரும்பினாராயினும் அது நடைபெறவில்லை. அவரது எழுத்துகக்ளை வெளிக்கொணரும் முயறச்ணீகளில் 1956ம் ஆண்டிலிருந்து 1965ம் ஆண்டுவரை ஏறத்தாழ பத்து வருடங்கள் தொடரச்;சியாக ஈடுபட்ட ஒருவரைக் காணுகின்றோம். அவர்தான் மட்டக்களப்பின் குருமண்வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளரும் அறிஞருமான அருள ;செல்வநாயகம் அவர்கள் (பக்.எ) எனக் குறிப்பிடடி;ருப்பதும்

விபுலாநந்த இலக்கியம் எனும் இதே நூலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள் சுவாமி விபுலாநந்தரை தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்திய கிழக்கிலங்கையின் புகழ்ப10ரத்;த எழுத்தாளர ;அருள ;செல்வநாயகம்

(பக்.ஒடி) எனும் தலைபப்ணீல் தனது காதத்ணீரமான கடடு;ரையை பதிவு செய்துள்ளதும் மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை 1992 இல் வெளியிடட் நினைவு மலரில் சுவாமிகளுடைய வரலாறு எழுதப்பட வேண்டும். அவருடைய ஆக்கங்கள் தொகுத்து வெளியிடப் பட வேண்டும் என்ற எண்ணத்தை முதன் முதலாக ஏற்படுத்திக் கொண்டவர் அமரர் அருள் செல்வநாயகம் அவர்களே. யாரும் நினைத்துப் பார்க்காத காலத்தில் தன்னந்தனியனாக இம்மாபெரும் முயறச்ணீயில் ஈடுபட்டு வெற்றி கண்டவர் அமரர் அருள் செல்வநாயகம் அவர்கள.; அடிகளாரை நினைக்கும்போது தம்மையும் சேர்த்து நினைக்குமாறு அவர் பணிபுரிந்துள்ளார். (பக். 108) எனக் குறிப்பிட்டுள்ளதும்

சுவாமி விபுலாநந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரின் கையெழுத்துப் பிரதிகளாக இருந்த சில ஆக்கங்களையும் முதன் முதலாக அச்சுப்பிரதியாக்கி மக்கள ;மத்தியில் கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் அருள ;செல்வநாயகம் எனும் பேரறிஞ்சரையே சாரும் என்பது நிருபனமாகிறது. சுவாமி விபுலாநந்தர் பற்றி பேசுகின்றவர்கள ;அவருக்கு விழா எடுக்கின்றவர்கள ; அருள ;செல்வநாயகம் பற்றி பேசாமல் கடந்து செல்ல முடியாது எனலாம். அந்தளவிற்கு விபுலாநந்த

இலக்கியத்தோடு அமரர் அருள ;செல்வநாகம் அவர்கள ;தொடர்பு கொண்டுளளார் என்பது எனது மனப்பதிவு:

சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்களை அமரர் அருள் செல்வநாயகம் அவர்கள் எவ்வாறு மக்களுக்குக் கொண்டு சேர்த்தாரோ அவ்வாரே அமரர் அருள் செல்வநாயகம் அவர்களது அச்சுப்பிரதியாகவுள்ள நூல்களையும் கையெழுத்துப் பிரதிகளாகவுள்ள ஆக்கங்களையும் நமது இளம் சந்ததியினருக்கு கொண்டு சேர்க்க வேண்டியது காலதத்ணீன் கட்டாயமாகும். மானிட அறம ;அருகி வருகின்ற இந்த கால கடட்த்தில் இவ்வாறான ஆக்கங்கள் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு அரும்மருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

1973.09.02 அன்று யாழ்பாணத்தில் இறைபதம் அடைந்த அமரர் அருள் செல்வநாயம் அவர்களது உடலை அவரது குருமண்வெளி கிராமத்திற்கு கொண்டுவரும் வழியில் எழுத்தாளர ;சங்கத்தின் வேண்டுதலில் சிறிது நேரம் மட்டக்களப்பு மாநகரத்தில் வைத்து அஞ்சலி செய்த போது அதில் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களினால் படிக்கப்பட்ட அஞ்சலிக் கவிதை கடல்கடந்த நாடெல்லாம் கொடிகட்டி வாழ்ந்தமகன் பிடிசாம்ப ராகிவிட என்ன கொடும் தவறு நாம்செய்தோம்! இனம்மதம் சாதியென இறுகிவிட்ட கோப்புகக;ள் மனிதத்தை நேசித்த மகானிந்த மாமனிதன் பணமும் பகடடு;ம் பல்லிளிக்க முடியாத புனிதனிவன் இவன்வாழ்வில் தூக்கியவை நூல்கள் சுமந்ததெல்லாம் தமிழ்ப்பணிகள் நாற்பத்தே ழாண்டுகளாய் நடந்துவந்த இவன்பயணம் ஆருக்கும் பாரமானதில்லை ஆதலினால் தானோ அமைதியுடன் தூங்குகிறான்!